The Biblical History of Israel (70-2020 CE)
இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரம் – பாகம் 4

Presented by
Rev. D. David
Lesson: 02
Part: Four

Post Destruction of Second Temple

எருசலேம் ஆலயத்தின் அழிவுக்குப்பின்

- 1). பின்விளைவுகள்: கிபி 66–70 வரை நடைபெற்ற யூதர்களின் கிளர்ச்சி பெரிய அழிவை ஏற்படுத்தியதை தாங்கிக் கொண்டார்கள். எருசலேம் ஆலயம் இடிக்கப்பட்டு, எருசலேம் நகரம் தரைமட்டமாக்கப்பட்டு, பொருளாதாரம், சொத்துக்கள் மற்றும் விளைநிலங்கள் எல்லாம் அழிக்கப்பட்லும் நம்பிக்கை இழக்காமல், ரோமானியர்கள் கடுமையான கட்டுபாட்டில் வாழ்ந்தாலும் தங்களின் கடின உழைப்பை விட்டுவிடவில்லை..
- 2) .யோகன்னன் பென் சகரியா (Yochanan Ben Zakkai): கிபி 70 ல் ரோமானியர்களால் எருசலேம் முற்றுகையிடப்பட்ட காலத்தில், பலர் யூதர்களின் கிளர்ச்சியை நியாயப்படுத்தினாலும், வலிமையான ரோமானியப் பேரரசை வெற்றி பெறுவது சாத்தியம் அல்ல என்பதை பல யூத தலைவர்கள் உணர்ந்ததால், இவர்கள் கிளர்ச்சியை எதிர்த்தார்கள். இதில் யோகன்னன் பென் சகரியா என்ற யூத ரபி, எருசலேம் ஆலயம் சீக்கிரத்தில் அழிக்கப்படும் என்பதை வேதத்தின் மூலம் கண்டுகொண்டார் (ஏசா 10: 32–34).
- 3). வெஸ்பெசியன் மற்றும் யோகன்னன்: யூதர்களின் பெரிய அழிவை தடுக்க, யோகன்னன், தளபதி வெஸ்பேசியனுடன் சேர்ந்து, யூதர்களிடம் சமாதானம் ஏற்படுத்த கடும்முயற்ச்சி மேற்கொண்டார். ஆனால் ரோமானியர்களிடம் சரணடைய வேண்டும் என்று கூறும் எவரும் தூக்கிலிடப்படுவார்கள் என்றும், யாரும் எருசலேமைவிட்டு வெளியேறகூடாது என்று செலோத்தே (Zealots) தலைவர்கள் உத்தரவிட்டார்கள். இந்நிலையில் யோகன்னன் மரித்துப்போன சடலமாக நடித்து, தனது சீடர்கள் மூலம் எருசலேமிலிருந்து வெளியேறி, வெஸ்பேசியனிடம் சரணடைந்தார். ஜாம்னியா கிராமத்தை யூத வேத பண்டிதர்கள் குடியிருக்கும் பகுதியாக ஒதுக்கிவிடுமாறு கேட்டுக்கொண்டார். வெஸ்பேசியன் இதை ஏற்றுக் கொண்டார்.

Dawn of Rabbinic Judaism
ரபினிக் யூத மதத்தின் ஆரம்பம்





- <u>4).ஜாம்னியா வேதகலாசாலை:</u> எருசலேம் அழிக்கப் பட்டவுடன், யோகன்னன் பென் சகரியா (Yochanan Ben Zakkai) ஜாம்னியாவில் கிபி 68 ல் வேதபாடசாலையை ஆரம்பித்தார், பிற்காலத்தில் இது யூத மத்ததின் மையமாக மாறியது. யோகன்னன் யூத மதத்தின் முக்கியமான வேத விளக்க உரையான (Jewish Bible Commentary) மிஷ்னாவை (Mishnah) எழுதினார். இவரது பாடசாலை எருசலேமின் துயர சம்பவத்திலிருந்து தப்பிய வேத பண்டிதர்களை ஈர்த்தது. ஜாம்னியா பாடசாலை மிட்ராஷ் (Midrash), மிஷ்னா (Mishna), தால்முத் (Talmud) மற்றும் அகடா (Aggadah) போன்ற யூத இலக்கியங்களின் படிப்புகளுக்கு சிறந்த இடமாக விளங்கியது.
- <u>5). தால்முத்:</u> தால்முத் என்பது ரபினிக் யூத மதத்தின் வேதாகம விளக்க உரைகள், யூத மதச் சட்ட திட்டங்கள், இறையியல் பாடங்கள், யூதமத சடங்கு மற்றும் சம்பிரதாயங்களின் ஆதாரமாகும். இது யூதர்களின் அன்றாட வாழ்க்கை நடைமுறைகள், விவசாயம், தொழில், பண்டிகைகள், விருந்து வைபங்கள், ஜெபக்கூடுகைகள் மற்றும் திருமணங்கள் உள்ளிட்ட யூத கலாச்சார நெறிமுறைகளையும் விளக்குகிறது.
- <u>6). ஜெப ஆலயம்:</u> யெகோவா கடவுளை ஆராதிக்க எருசலேம் ஆலயம் இல்லாத நிலையில் யூத ஜெப ஆலயங்கள் ஆங்காங்கே கட்டப்பட்டது. யோகன்னன் கடவுளுக்கு ஆடு, மாடுகளை பலி செலுத்துவதற்கு பதிலாக ஜெபத்தை ஏரெடுக்க வலியுறுத் தினார் (ஓசி 6: 6). பிரதான ஆசாரியர்களுக்கு பதிலாக யூத மதத்தின் ரபிகள் செயல்பட்டார்கள். இவர்கள் தோராவை யூதர்களுக்கு விளக்கியதோடு, யூத மத கலாச்சார, வழிகாட்டுதல்களை வழங்கினார்கள். இந்த யூத ரபிகள், யூதமத இலக்கியங்கள் மற்றும் போதனைகள் மூலம் யூத மதத்தை அழிந்துவிடாமல் பாதுகாத்து கொண்டார்கள். இதுவே ரபினிக் யூதமதமாகும். இந்த அமைப்பானது பிற்காலத்தில் யூத மதத்தைத் வழிநடத்தும் அதிகாரப்பூர்வ அமைப்பாக மாறியது.

Josephus, the Jewish Historian (37-100 CE) / யூத வரலாற்று ஆசிரியர் யோசிபஸ்





- <u>ஆசிரியர் யோசிபஸ்:</u> கிபி 66 ல் யோசிபஸ், யூதர்களுக்கும்-ரோமானியர்களுக்கும் இடையே நடைபெற்ற போரின்போது, கலிலேயாவில் யூதப் படைகளின் தலைவராக செயல்பட்டார். செலோத்தியர்கள் யுத்தத்தின் போக்கை தீவிரப்படுத்த, எருசலேமில் இருந்த மிகப்பெரிய உணவு தானிய கிடங்கை தீ வைத்து கொளுத்தியதுடன், யுத்தத்திற்கு எதிராக பேசிய பல யூத அறிஞர்களை கொலை செய்தார்கள். இந்த பயங்கரவாத போக்கு யோசிபஸ்க்கு பிடிக்கவில்லை. ஆகவே கி.பி 67 இல் வெஸ்பேசியனிடம் சரணடைந்த, யோசிபஸை நண்பராக்கி, யூத மொழிபெயர்ப்பாளராக வைத்துக்கொண்டார். யோசிபஸ், ரோமானிய அரசாங்கத்தின் சார்பாக யூதர்களிடம் சமாதான பேச்சுவார்த்தை நடத்தி, எருசலேமை மிகப்பெரிய அழிவிலிருந்து காப்பாற்ற முயற்சிகளை மேற்கொண்டார்.
- <u>யோசிபஸ் எழுத்துபணி:</u> கிபி 70 ல், எருசலேம் ரோமானியர்களால் கைப்பற்றிய பிறகு, ரோம பேரரசர் வெஸ்பேசியன் ரோமானிய குடியுரிமையும் ஓய்வூதியம் வழங்க உத்தரவிட்டதால், யோசிபஸ் ரோமுக்கு குடிபெயர்ந்தார். அங்கு கிபி 66-70 வரை நடைபெற்ற யூத-ரோமானிய யுத்தத்தை 7 புத்தகங்களாக எழுதி கி.பி 75 இல் The History of Jewish War என்று வெளியிட்டார். அப்படியே வேதாகம காலம் முதல் தன்னுடைய மரணம் வரை உள்ள யூதர்களின் சரித்திரத்தை 20 புத்தகங்களாக எழுதி, அதை கிபி 93 ல் The Antiquities of the Jews என்று வெளியிட்டார். இவர் எழுதிய யூதர்களின் சரித்திரம், வேதாகமத்திற்கு பிறகு உலக அளவில் மிக முக்கியமான ஆதாரமாகும். இவர் இயேசுவின் வாழ்க்கை பற்றியும், பிலாத்துவால் சிலுவையில் அறையப்பட்ட மேசியாதான் இயேசு என்றும் குறிப்பிட்டுள்ளார். யோசிபஸ், ரோமானிய பேரரசர்களான வெஸ்பேசியன், டைட்டஸ் மற்றும் டொம்னீசியன் (Domitian) ஆகியோரின் அரசவைகளில் மிகவும் முக்கியமானவராகவும் இருந்து கிபி 100 ல் மரித்தார்.

Council of Jamnia (90 AD)
ஜாம்னியா சபை மன்றம்

- சபை மன்றத்தின் நோக்கம்: 1). அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த யூதர்கள் தோரா (ஐந்து ஆகமம்) மற்றும் தீர்க்கதரிசன புத்தகங்களை ஏற்றுக்கொண்டனர். அத்ததுடன் படிப்படியாக 6 இரண்டாம் நிலை திருமறைகளோடு (Deutro Canonical Books) கூடுதலாக 9 பகுதிகளையும் பழைய ஏற்பாட்டின் 39 புத்தகங்களோடு சேர்த்துக்கொண்டார்கள். கிபி 30 க்கு பின் வளர்ந்து வரும் இயேசு இயக்கத்தினரால் (Jesus Movement) எழுதப்பட்ட புத்தகமும் இறையருள் பெற்றது என்று கிறிஸ்தவர்கள் போதித்தார்கள். இதற்காக பாலஸ்தீனத்தில் கிபி 90 ல் யூதர்களின் ஜாம்னியா திருச்சபை மன்றம் கூட்டப்பட்டது.
- 2).கலந்துரையாடல்கள்: ஜாம்னியா சபை மன்றத்தில் பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களை தவிர புதிய புத்தகங்களையும் சேர்ப்பது பற்றி எந்த விவாதமும் நடைபெறவில்லை. மேலும் இதில் ரூத், எஸ்தர், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப் பாட்டு மற்றும் எசேக்கியேல் புத்தகங்களின் நம்பகத்தன்மை மற்றும் வேதாக வரைமுறையில் (Biblical Canonicity) பற்றியும் யூத மதகுருமார்களிடையே விவாதம் எழும்பியது.
- தீர்மானங்கள்: இந்த சபை மன்றத்தில் 1). எபிரேய வேதத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பான செப்டுவஜின்ட்டில் (Septuagint) இருந்த இரண்டாம் நிலை திருமறைகள் (Apocrypha) மற்றும் கூடுதல் இணைப்புகள் அனைத்தையும் நிராகரித்தார்கள். 2). கிறிஸ்தவர்களின் புதிய ஏற்பாடு நூல்களை முழுவதையும் நிராகரித்தார்கள். 3). இந்த ஜாம்னியா சபை மன்றத்தில் யூதர்கள் பயன்படுத்தும் எபிரேய வேதாகமத்தில் 39 புத்தகங்கள் மட்டுமே வேதாகம வரைமுறை நியதிக்கு உட்பட்டது என்பதை உறுதிப்படுத்தினார்கள். 4). யூத மதத்திற்கு துரோகம் செய்த, யூதமதத்திலிருந்து கிறிஸ்தவர்களானவர்கள், யூத மதத்திற்கு துரோகம் செய்தவர்கள் என்று அறிவித்து அவர்களை யூதர்களின் ஜெப ஆலயங்களிலிருந்தும், யூத மத சமுகத்தில் இருந்தும் விலக்கி வைக்கவும் முடிவு செய்தார்கள்.

The Jewish Diaspora Revolt of Cyrenaica in (115-117 CE) புலம்பெயர்ந்த யூதர்களின் கிளர்ச்சி



- 1). கிட்டோஸ் போர் (Kitos War): இது இரண்டாவது யூத –ரோம யுத்தம் ஆகும். இது கிபி 85-115 வரை கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்கள் மீது கடுமையாக நடந்துகொண்ட ரோமானிய பேரரசர்கள் Domitian மற்றும் Trajan ஆகிய இருவரின் கொடுங்கோல் ஆட்சியினால் ஏற்பட்ட எதிர்மறையான விளைவுகள் ஆகும். ரோமானிய பேரசர்கள் கிரேக்க மயமாக்குதலை யூதர்கள் மீது திணித்ததினால், யூதர்கள் விரக்தி அடைந்தார்கள்.
- 2). ரோம பேரரசர் ட்ராஜன் (Trajan). இவர் கிபி 115 ல் தனது கனவு திட்டத்தின்படி, கிழக்கத்திய நாடுகளை, தனது ஆட்சியின்கீழ் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கில் பார்த்தியா தேசத்தைக் கைப்பற்ற சென்ற நேரத்தில் ஆப்பிக்காவின் சிரேனேயு, எகிப்து, மொசப்பத்தோமியா மற்றும் சைப்ரஸ் பகுதியில் வசித்துவந்த புலம்பெயர்ந்த யூதர்கள், இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ரோம பேரரசிற்கு எதிராக பெரிய கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்.
- 3). புலம்பெயர்ந்த யூதர்களின் கிளர்ச்சி: யூதர்கள், லூக்காஸ் என்ற அந்திரேயா என்பவரின் தலைமையில், வடக்கு ஆப்ரிக்காவில் சிரேனேயு நகரின் கலவரத்தை ஏற்படுத்தி னார்கள். அப்போது யூத கிளர்ச்சியாளர்கள், ரோமானிய மற்றும் கிரேக்க தேவர்களான ஹெகேட் (Hecate), நெமிசிஸ் (Nemesis), வியாழன் (Jupiter), அப்பல்லோ (Apollo), ஆர்ட்டெமிஸ் (Artemis), புளூட்டோ (Pluto), தேமேதிர் (Demeter) மற்றும் ஐசிஸ் (Isis) ஆகியோரின் கோயில்களை தீவைத்து எரித்து, அங்கு வழிபட்டுக் கொண்ட ரோம மற்றும் கிரேக்க பக்தர்களை கடுமையாக தாக்கி படுகொலை செய்தார்கள். உயிர்பிழைக்க எகிப்தின் அலெக்சாந்திரியாவுக்கு சென்ற, பிற மத்தவர்கள், அங்கிருந்த ரோமானியர்கள் மற்றும் கிரேக்கர்களுடன் சேர்ந்து, அங்கு வசித்துவந்த யூதர்களை சிறைபிடித்து, பலரை கொலை செய்தார்கள். ஆகவே லூக்காஸ் தலைமையிலான யூதர்களின் படைகள் அலெக்சாந்திரியாவுக்கு விரைந்தனர். அங்கே உள்ளூர் யூதர்களுடன் சேர்ந்து, அங்கிருந்த கிரேக்கர்கள் மற்றும், ரோமானியர்களை பழிவாங்கினார்கள்.

The Kitos War (115-117 CE)
யூதர்களின் கிட்டோஸ் போர்

- <u>4).பாம்பே கல்லறை:</u> யூத கிளர்ச்சியாளர்கள் கிமு 63 ல் எருசலேமை முதலாவது கைப்பற்றிய ரோமானிய தளபதி பாம்பேயின் (Pompey) கல்லறையை இடித்துப்போட்டு, அலெக்சாத்திரியாவில் ரோமானியர்களின் நினைவுச் சின்னங்கள் பலவற்றை தீக்கிரையாக்கி, உடைத்துப் போட்டார்கள். யூதர்களின் கிளர்ச்சி சைப்ரஸ் தீவிற்கும் பரவியதால், அங்கிருந்த யூதர்களும் ரோமானியர்கள் மற்றும் கிரேக்கர்களுக்கு எதிரான வன்முறையில் இறங்கினார்கள். இறுதியாக யூதர்களின் கிளர்ச்சி யூதேயாவிலும் பரவியதால் எருசலேமிலிருந்த கிரேக்கர்களும் ரோமானியர்களும் அதிக அளவில் படுகொலை செய்யப்பட்டார்கள்.
- <u>5).ரோமபடையின் பதிலடி:</u> ரோமானிய பேரரசர் ட்ராஜன் அலெக்சாந்திரியாவில் யூத கிளர்ச்சியாளர்களைத் ஒடுக்க ரோமானிய ஆளுநர் குவிண்டஸ் மார்சியஸ் (Quintus Marcius) என்பவர் தலைமையில் பெரும்படையை அனுப்பினார். இவர் சைப்ரஸ், எகிப்து மற்றும் சிரிய நாடுகளில் கிளர்ச்சி செய்த யூதர்களை தோற்கடித்து, அவர்களில் 1,50,000 பேரை படுகொலை செய்து, கிளர்ச்சியை அடக்கினார். இதனால் ரோமானிய பேரரசர், மார்சியஸ்க்கு பதவி உயர்வு கொடுத்து கிபி 117 ல் யூதேயாவின் ஆளுநராக நியமித்தார்.
- <u>6). ரத்த ஆறு:</u> கிட்டோஸ் யுத்தத்தில் ஏற்பட்ட அழிவு அளவிட முடியாதது ஆகும். எகிப்து மற்றும் சிரேனேயில் வசித்த 2,20,000 கிரேக்கர்கள், ரோமானியர்கள், மற்றும் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர், மேலும் 2,40,000 பேர் சைப்ரஸிலும் கொல்லப்பட்டனர். இதனால் சிரேனேயு மற்றும் சைப்ரஸ் பகுதிகளில் யூத, கிரேக்க, மற்றும் ரோமானிய ஜனத்தொகையை வெகுவாக குறைத்தன.

The Kitos War (115-117 CE)
யூதர்களின் கிட்டோஸ் போர்

- 7). ரோம அரசாங்க முடிவு: இதற்கு இடையே யூதர்களால் அழிக்கப்பட்ட கிரேக்க மற்றும் ரோமானிய கோயில்களின் புனரமைப்பு செலவுக்காக யூதர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்ய ரோம பேரரசன் ட்ராஜன் உத்தரவிட்டார். யூதமதம் தான் தொடர்ச்சியான கிளர்ச்சிகளுக்கு காரணம் என்று குற்றம்சாட்டி, யூதமதத்தை முழுவதும் ரோம பேரரசில் இருந்து அழிக்க செயல்பட்டார்.
- 8)யூதமத அழிப்பு: ஹட்ரியன் யூத சிறை கைதிகளை அடிமைகளாக விற்க உத்தரவிட்டார். யூத மத குருமார்கள் தோராவை போதிக்க தடைவிதித்தார். யூத குழந்தைகளுக்கு விருத்த சேதனம் செய்வதை தடைவிதித்தார். புனித நூலான தோரா (ஐந்து ஆகமம்) மற்றும் எபிரேய நாட்காட்டியை (Hebrew Calendar) தடைசெய்து, யூத மத குருமார்களை தூக்கிலிட உத்தரவு பிரப்பித்தார். யூத ஜெப ஆலயங்களை ரோமானிய கோவில்களாக மாற்ற உத்தரவிட்டார். அதில் ரோமானிய தெய்வமாய வியாழன் (Jupiter) மற்றும் தனது சிலைகளை நிறுவினார். யூதேயாவின் அழிக்கும் முயற்சியில், இதை பாலஸ்தீனம் என்று மாற்றினார். யூத வம்சாவளியினர் அல்லது யூத மதத்தை சேர்ந்தவர்கள் எவரும் சைப்ரஸில் நுழைவது தடை செய்யப்பட்டது.
- 9).புலம் பெயர்ந்த யூதர்களின் முடிவு: வடக்கு ஆப்பிரிகாவில் யூதர்கள் வாழ முடியாத சுழ்நிலை ஏற்பட்டது. இதனால் பல யூதர்கள் யூத மதத்தையும் தங்களது பாரம்பரியங்களையும் விட்டு விட்டு, நாடோடி வாழ்க்கை நடத்தினார்கள். இப்படியாக ரோமானியர்களுக்கு எதிரான யூதர்களின் இரண்டாவது போர் கிபி 117 ல் முடிவுக்கு வந்தது.

Bar Kokhba revolt (132–136 CE)
பார்–கோபா கிளர்ச்சி

- 1). பார்–கோபா கிளர்ச்சி: இது மூன்றாவது யூத – ரோம போர் மற்றும் இறுதி போர் ஆகும். யூதர்களின் கிளர்ச்சியினால் தோல்வியில் முடிந்த முதல் போர் (கிபி. 66–73) மற்றும் இரண்டாம் போர் (கிபி. 115-117) ஆகியவற்றுக்குப்பின் யூதேயாவில் ஏற்பட்ட மத, அரசியல் போராட்டங்களின் விளைவாக, மூன்றாம் கிளர்ச்சி வெடித்தது. இந்த கிளர்ச்சிக்கு சைமன் பார்–கோபா என்பவர் தலைமை தாங்கினார்.
- 2).சைமன் பார்–கோபா: இவர் தாவீதின் வம்சாவளியை சேர்ந்தவர். பார்–கோமா என்பது அராமேய மொழியில் நட்சத்திரத்தின்–மகன் (எண் 24:7). இந்த பதம் நட்சத்திரத்தை மேசியாவோடு ஒப்பிட்டு கூறுவதாகும். பார்–கோமா தன்னை இளவரசர் என்ற பொருளில் நாசி (Nasi) அழைத்துக்கொண்டார். இவருடைய கவர்ந்திழுக்கும் பேச்சு திறமையினால், ரோமானியர்களுக்கு எதிரான யுத்தத்தில், வெற்றிக்கு நேராக அழைத்துச் செல்வதற்காக வாக்குதத்தம் பண்ணப்பட்ட மேசியா என்று அநேக யூதர்கள் நம்பினார்கள்.
- 3).கிளர்ச்சியின் காரணம்: கிபி. 131 இல், ரோமானிய பேரரசர் ஹட்ரியன் (Hadrian), யூதர்களுக்கு ஆதரவாக கிரேக்க மயமாக்கும் திணிப்பை கைவிட்டார். எருசலேம் ஆலயத்தை மீண்டும் கட்டிக்கொடுப்பதாக உறுதியளித்தார். ஆனால் இடிக்கப் பட்ட எருசலேம் ஆலயத்தில் கிரேக்க கடவுளான வியாழனுக்கு (Jupiter) கோவில் கட்ட திட்டமிட்டிருப்பதைக் கண்டறிந்த யூதர்கள், ஹட்ரியனும் துரோகம் செய்வதாக நினைத்தார்கள். எருசலேமின் நகரத்தை மீண்டும் கட்டியெழுப்பி, அதற்கு ஏலியா கேபிடோலினா (Aelia Capitolina) என்று பெயரிட்டு, அதை ரோமனியர்களின் குடியிருப்பு பகுதியாக ஹட்ரியனும் மாற்றிக் கொண்டார். இதற்கு யூதர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். இதற்கு பதிலடி கொடுக்க யூதர்கள் தோராவை படிப்பது, ஓய்வுநாள் அனுசரிப்பு, விருத்தசேதனம் செய்வது, யூத நியாய சங்கங்கள், ஜெப ஆலயங்களில் சந்திப்பு மற்றும் பிற சடங்கு முறைகளைத் தடைசெய்யும், யூதமத விரோத கட்டளைகளை பிறப்பித்தார்.

Bar Kokhba revolt (132–136 CE)
சைமன் பார்–கோபா கிளர்ச்சி





- 4).ரோமானிய கவர்னர்: கிபி 131 ல் யூதேயாவின் ரோமானிய ஆளுநரராக, குயின்டஸ் டைனியஸ் ரூஃபஸ் (Quintus Tineius Rufus) நியமிக்கப்பட்டார். இவரும் யூதர்களுக்கு விரோதமாக கடுமையாக நடந்துகொண்டார். குயின்டஸ் யூதர்களின் மதிப்பிற்குரிய மதகுருவான முதலாம் கமாலியேலுக்கு எதிராக தேசதுரோக குற்றசாட்டுகூறி மரணதண்டனை வழங்கினார். யூத மதகுருவான அக்கிவாவை (Akiva), அவமானப்படுத்தி, யூதர்களை ரோமானியர்களின் அடிமைகள் என்று கேவலப் படுத்தி, அநேக யூத பெண்களிடமும் தகாதமுறையில் நடந்து கொண்டார். குயின்டஸ் பல ஜெபஆலயங்களை அசுத்தப் படுத்தினார். இது மூன்றாவது போருக்கு அழைத்துச் சென்றது.

- 5).மூன்றாவது யுத்த ஆயத்தம்: பார்–கோபா தலைமையில் இந்த முறை, மிக கவனமாக, கிளர்ச்சியை நடத்தத் திட்டமிட்டார்கள். ரோமானியர்களின் கட்டுபாட்டிலிருக்கும் யூதேயாவை கைப்பற்றி, எருசலேமின் ஆலயத்தை கட்டிவிட வேண்டும் என்ற நம்பிக்கையோடும், போருக்கு தேவையான பெருமளவு ஆயுதங்களை சேகரித்தார்கள். அப்படியே கொரில்லா போருக்காக தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டு, யூதேயா முழுவதும் சுமார் 350 மறைவிடங்களையும், சுரங்க பாதைகளையும் அமைத்தார்கள். ஒவ்வொரு யூதர்களின் வீடுகளிலும் பதுங்கு குழிகளை அமைத்துக்கொண்டார்கள்.

- 6).திடீர் தாக்குதல்: கிபி 132 இல், கிளர்ச்சிக்கான எல்லா ஆயத்தத்தோடு ரோமானிய படைகளுக்கு எதிராக கொரில்லா போர் முறையில் கடுமையாக தாக்கி, யூதேயாவில் 50 ரோமானிய படைகளின் கோட்டைகளையும், எருசலேம் உட்பட சுமார் 985 மதில் சூழப்படாத நகரங்களையும், கிராமங்களையும் விரைவாக கைப்பற்றினார்கள். யூதர்களின் இந்த கிளர்ச்சியில் ரோமானிய படைகள் நிலைகுழைந்து போயின. இதனால் மத்திய யூதேயாவிலிருந்து, யூதேயா முழுவதும் ரோமானிய படைகளுக்கு எதிரான கிளர்ச்சி வேகமாக பரவியது.

Bar Kokhba revolt (132–136 CE)
பார்–கோபா கிளர்ச்சி

- <u>6). கிறிஸ்தவர்களுக்கு எதிராக யூதர்கள்</u>: யூத கிறிஸ்தவர்களை ரோமானிய துருப்புக்களுக்கு எதிராகவும், யூதர்களுக்கு ஆதரவாகவும் செயல்படும்படி சைமன் பார்–கோபா கேட்டுக்கொண்டார். இதற்கு யூத கிறிஸ்தவர்கள் மறுத்தபோது, யூத கிறிஸ்தவர்களை கடுமையாக தாக்கி, சேதத்தை ஏற்படுத்தி, அநேகரை கொலையும் செய்தார்கள். அப்படியே பார்–கோபா படைகளுக்கு ஆதரவு கொடுக்காத கிரேக்க மற்றும் ரோமானிய மக்ககளையும் அநேகரை கொலை செய்தார்கள்.
- <u>7).ரோமனியப்படை நிலைகுலைதல்</u>: பார்–கோமா கிளர்ச்சியை அடக்க, ரோமானிய பேரரசர் ஹட்ரியன் 35,0000 துருப்புக்களை யூதேயாவிற்கு அனுப்பினார், அவர்களில் 20,000 பேரை யூத கிளர்ச்சியாளர்கள் கொரில்லா போர் முறையில் கொன்றார்கள். யூத கிளர்ச்சியாளர்கள் யூதேயாவின் நிலப்பரப்புகளை நன்கு அறிந்து இருந்ததால், ரோமானியர்களின் வலுவான கோட்டைகள் பலவற்றை கைப்பற்றினார்கள். இந்நிலையில் புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த பல யூதர்களும் பார்–கோபாவின் படைகளுடன் இணைந்து கொண்டார்கள்.
- <u>8). ஜூலியஸ் செவெரஸ் போர் தந்திரம்</u>: யூதேயாவில் நிலைமை மோசமாவதை உணர்ந்த ரோமானிய பேரரசர் 80,000 போர்வீரர்களை அனுப்பி வைத்தார். இங்கிலாந்திலிருந்த ரோமானிய ஜெனரல் ஜூலியஸ் செவெரஸ் (Julius Severus) யூதேயாவிற்கு உடனடியாக வர உத்தரவிட்டார். ஜூலியஸ் செரவரஸ் இங்கிலாந்திலிருந்த ரோமானிய இராணுவத்தின் மூன்றில் ஒரு பகுதியை (1,20,000 சிப்பாய்கள்) அழைத்துவந்து, பார்–கோபாவுக்கு எதிரான போரில் இறங்கினார். இவர் ஒவ்வொரு முறையும் நிதானமாக ஆனால் வெறித்தனமான போர் யுத்திகளைகளை பயன்படுத்தி, இரண்டு ஆண்டுகளில் யூத கிளர்ச்சியாளர்களின் உள்கட்டமைப்பை கொஞ்சம் கொஞ்சமாக அழித்து, அவர்கள் கைப்பற்றிய இடங்களை மீட்டெடுத்து, இறுதிகட்ட போருக்கு முன்னேறினார்.

Bar Kokhba revolt(132–136 CE)
பார்–கோபா கிளர்ச்சி

- 8) .பெடார் (Betar) முற்றுகை: கிபி. 135 இல் யூத–ரோமானிய யுத்தம் உச்ச கட்டத்தை அடைந்தது. இந்நிலையில் ரோமானிய தளபதி ஜூலியஸ் செவெரஸ் யூத கிளர்ச்சியாளர்களின் கோட்டையான பெடார் (Betar) பகுதியை முற்றுகையிட்டார். இந்த பெடார் பகுதியில்தான் பார்–கோபாவின் தலைமையகமும், யூதர்களின் நீதிமன்றமான சனகெரிப் சங்கமும் இருந்தது.
- <u>9).பார்–கோபா படுகொலை</u>: பார்–கோபாவின் சொந்த ஊரில் நடைபெற்ற நடைபெற்ற கடுமையான யுத்தத்தில் ஆயிரக்கணக்கான யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த கடைசிகட்ட யுத்தத்தில், பார்–கோபாவை ரோமானிய படைகள் உயிருடன் பிடித்தது. இப்போது ரோமானிய இராணுவ தளபதி ஜூலியஸ் செராவரஸ் பார்–கோபாவின் தலையை துண்டித்து, அதை ரோமானிய பேரரசரான ஹட்ரியனுக்கு அனுப்பினார்.
- <u>10).ரோமானியர்களின் கொடூரத்தனம்</u>: ரோமானியப் படைகள் திட்டமிட்ட கொலை வெறியோடு, எருசலேமில் இருந்த யூதர்களின் குடியிருப்பு பகுதிகளுக்குள் சென்று, கைதுசெய்து, நூற்றுக்கணக்கான கைக்குழந்தைகளை சுவர்களில் மோதியடித்து படுகொலை செய்தார்கள். பல யூதமத தலைவர்கள், மதகுருக்கள் மற்றும் செல்வாக்கு மிக்கவர்கள் பலர் ரத்த சாட்சியாக கொல்லப்பட்டார்கள்.
- <u>11). யுத்தத்தின் சேதங்கள்</u>: பார்–கோபா கிளர்ச்சியின் விளைவாக இந்த மூன்றாம் யூத–ரோமானிய யுத்தத்தில் சுமார் 5,80,000 யூதர்கள் கொல்லப்பட்டனர், மேலும் யூதர்கள் கைப்பற்ய 50 கோட்டை நகரங்களும், 985 கிராமங்களும் தரைமட்டம் ஆக்கப்பட்டது. யுத்தத்திற்கு பின்னர், நூற்றுக்கணக்கான யூதர்கள் பஞ்சம், தொற்றுநோய் மற்றும் தீக்காயங்களில் இறந்தார்கள். இந்த யுத்தத்தில் கைதுசெய்யப்பட்ட ஆயிரக்கணக்கான யூத ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் அடிமைகளாக வேறு நாடுகளுக்கு விற்கப்பட்டார்கள்.

Bar Kokhba revolt(132–136 CE)

பார்–கோக்பா கிளர்ச்சி

- <u>12)ரோமானிய படையின் யூதமத அழிப்பு</u>: யூதர்களின் வேதாகம விளக்க உரையான மிஷ்னா (Mishna) வை எழுதிய மதகுரு அக்கிவாவைவும் (Akiva) அவருக்கு சீடர்களாக இருந்த 10 மதகுருமார்களையும் ரோமானியப் படையினர் படுகொலை செய்தார்கள். ரோமானிய படைகள் ஜெப ஆலயத்தில் நுழைந்து அங்கிருந்த யூத ரபிமார்களையும் மாணவர்களையும் அங்கிருந்த தோரா சுருள்களில் கட்டிவைத்து உயிரோடு எரித்து கொன்றார்கள். எருசலேம் முழுவதும் இடித்து தரைமட்டம் ஆக்கப்பட்டது. இப்போது எருசலேம் ஏலியா கேபிடோலினா (Aelia Capitolina) என்று பெயர் மாற்றபட்டது,
- <u>13).இரத்த ஆறு</u>: நான்கு ஆண்டுகள் நடைபெற்ற பார்–கோபா கிளர்ச்சியில் தப்பி பிழைத்தவர்களே இல்லை என்று சொல்லும் அழவிற்கு யூதர்கள் சிந்திய இரத்தம் பல மைல்களுக்கு ஆறாக ஓடியது. ஆயிரக்கணக்கான யூதர்களின் சடலங்கள் அடக்கம் பண்ணப்படாமல் தெருக்களில் கிடந்தது. இந்த யுத்தத்தின் போது சிந்தப்பட்ட இரத்தமும், மனித சடலங்களும் ரோமானியர்களின் விளைநிலங்களுக்கு ஏழு ஆண்டுகளாக உரமாக இருந்தது என்று சரித்திர குறிப்புகள் கூறுகின்றது.
- <u>14). யூதர்கள் விரட்டியடிப்பு</u>: ரோமானியர்களிடம் இருந்து யூதேயா கைப்பற்ற வேண்டும் மற்றும் எருசலேமின் ஆலயத்தை மீண்டும் கட்டவேண்டும் என்ற அதிக நம்பிக்கையில், எதிர்பார்ப்புகளை ஏற்படுத்திய பார்–கோபா கிளர்ச்சி, இறுதியில் யூதர்களின் துன்புறுத்தப்படுதலிலும், இனப்படுகொலையிலும் அடிமையாக விற்கப்படுதலிலும் முடிந்தது. பார்–கோபாவின் படுகொலையோடு, யூத–ரோமானிய யுத்தம் முடிவுக்கு வந்தது. யூதர்கள் எருசலேமுக்குள் நுழைய தடைவிதிக்கப்பட்டது. இப்போதுதான் அரசியல் காரணத்திற்காக முதல்முறையாக யூதர்கள் உலகின் பல நாடுகளுக்கு புலம்பெயர ஆரம்பித்தார்கள் (Jewish Diaspora). இப்படியாக பண்டய இஸ்ரவேலின் அரசியல் வரலாறு யூதேயாவில் முடிவுக்கு வந்தது.

Bar Kokhba revolt (132–136 CE)
பார்–கோபா கிளர்ச்சி

- <u>15).தேசிய அழுகை தினம்</u>: பார்–கோமா கிளர்ச்சியின் விளைவாக யூதர்கள் எருசலேமுக்குள் குடியிருக்கவும், நுழையவும் கிபி 137 ல் தடைவிதிக்கப்பட்டது. கிபி 145 ல் பார்–கோபா கிளர்சியில் உயிரிழந்த யூதர்களுக்கு நினைவஞ்சலி செலுத்த, யூதர்களின் அவ் மாதம் 9 ம் தேதி மட்டும் (ஜூலை/ஆகஸ்டு) எருசலேமுக்குள் நுழைய ரோமானிய பேரரசு அனுமதி கொடுத்தது. இந்தநாளில் வருடத்திற்கு ஒருமுறை யூதர்கள் உபவாசம் இருந்து, எருசலேமின் முதல் ஆலய இடிப்பு (கிமு 586 இரண்டாவது ஆலய இடிப்பு (கிபி 70) மற்றும் பார்–கோபாவின் ஊரான பெத்தாரின் இடிந்த சுவர்களை நினைவுகூர்ந்து பிராத்தனை செய்துவந்தார்கள்.
- <u>16). கள்ள கிறிஸ்துகள்</u>: பார்–கோபா கிளர்ச்சிக்கு பின்னர் யூத–கிறிஸ்தவர்களும் எருசலேமில் நுழைய அரசாங்கம் தடைவிதித்தது. இதற்கு பின்பு, கிறிஸ்தவம், யூத மதத்தைவிட உயர்ந்தது என்ற நிலை உண்டாயிற்று, ஏனெனிலில் பார்–கோபாவை திருச்சபை, போலி மேசியா (Failed Messiah) என்று அழைத்திலிருந்து திருச்சபை தலைவர்கள் யூத மதத்திற்கு எதிராக பேசவும் எழுதவும் போதிக்கவும் செய்தார்கள்.
- <u>17).சுதந்திர போராட்ட வீரர்</u>: யூதர்கள் பார்–கோபாவை, இஸ்ரவேல் தேசத்தின் சுதந்தர போராட்டத்தின் முன்னோடியாக கருதுகின்றனர். ஆகவே பார்–கோமா படுகொலை செய்யப்பட்ட, யூதர்களின் ஐயார் (Iyar) மாதத்தின் 18 ம் நாளை (ஏப்ரல்/மே) Lag Ba'Omer என்ற பெயரில் விடுமுறை நாளாக அறிவித்து, உலகமெங்கும் இருக்கிற யூதர்கள் வெகு விமரிசையாக இன்றும் கொண்டாடுகிறார்கள். தன்னுடைய உயிர் போகும்வரை யூதர்களின் எதிரிகளை தைரியமாக போராடிய பார்–கோபா, இன்றும் யூதர்களின் மாவீரனாக சித்தரிக்கப் படுகிறார். பார்–கோபாவின் கிளர்ச்சி, யூதர்களின் சரித்திரம் மற்றும் யூத மத தத்துவங்களிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.

Life of Jews in Diaspora(137-1948)
புலம்பெயர்ந்த யூதர்களின் வாழ்க்கை

- <u>புலம்பெயர்ந்த யூதர்கள் (Jewish Diaspora)</u>: ரோமானிய பேரரசன் ஹட்ரியனால் யூதேயாவிலிருந்து விரட்டியடிக்கபட்ட யூதர்கள், அவர்களின் மூதாதையர்களின் தேசத்திலிருந்து வெளியேறி, உலகின் பல்வேறு பகுதிகளில் குடியேறினார்கள். அப்போது வெளியேறிய யூதர்கள், அடுத்த 1,800 ஆண்டுகளுக்கு பரதேசியாய் வாழவேண்டியதாயிற்.று.
- <u>பரதேசி வாழ்க்கை</u>: யூதர்கள் தாங்கள் புலம்பெயர்ந்த நாடுகளின் சூழ்நிலைக்கு, தங்களை மாற்றிக்கொண்டார்கள். எருசலேம் ஆலயமும், ஆசாரியர்களும் இல்லாத நிலையில் யூத ரபிமார்கள் முக்கியத்துவம் பெற்றார்கள். எங்கெல்லாம் 10 குடும்பங்கள் வசித்தார்களோ, அங்கு ஜெப ஆலயங்களை நிறுவி, யூதமத வழிபாடுகளை ஆசரித்து, கலாச்சாரத்தையும் தேசிய அடையாளத்தையும் பாதுகாத்துக் கொண்டார்கள். யூத ரபிகள் தோரா மற்றும் தால்முட் (Talmud) போதனைகளை கற்று கொடுத்தார்கள். இது யூதர்களின் மத வாழ்க்கை, சிந்தனை மற்றும் பாரம்பரியம் போன்றவற்றை புதுப்பிப் பதற்கான இடமாக மாறியது. ஜாம்னியா நகரம் சனகெரிப் சங்க தலைமையிடமாகவும் மாறியது.
- <u>யூத எதிர்ப்பு (Anti-Semetism):</u> யூதர்கள் மத்திய தரைக்கடல் பகுதி முழுவதும், தென்கிழக்கு ஆசியா, ஆப்ரிக்கா, மத்திய ஐரோப்பா, ரஷ்யா மற்றும் இறுதியில் அமெரிக்கா சென்று குடியேறினர். யூதர்கள் வெளிநாடுகளில் குடியிருந்தாலும், அந்த நாட்டின் மன்னின் மைந்தர்கள் யூதர்களை ஒருபோதும் சொந்தமாக ஏற்றுக்கொள்ளவில்லை. தங்கள் சொந்த தேசத்தில் வாழமுடியாததால் அந்நியர்களாக, பரதேசிகளாக, அடிமை களாக, இரண்டாம்தர குடிமக்களாக மற்ற நாட்டுகளில் தஞ்சம் புகுந்து சுதந்தர காற்றை சுவாசிக்க முடியாமல் போனார்கள். புலம்பெயர்ந்த நாடுளில் யூத-விரோத துன்புறுத்தல்களை வார்த்தைகளிலும், சரீர அளவிலும், உளவியல் ரீதியாகவும் சொல்லொன்னா துயரம் அனுபவித்தார்கள்.


Jewish Dispersion
or "Diaspora"
ROME
JERUSALEM
Areas of Jewish Settlement
1 CE
Late Roman Period
Possible Late Roman Period


קנדה
50,000
תחום המושב
ארצות הברית
2,040,000
15,000
65,000
ארץ ישראל
האוקיינוס האטלנטי
האוקיינוס השקט
קו המשווה
אמריקה הדרומית
115,000
45,000
15,000
האוקיינוס ההודי
דרום אפריקה
ארגנטינה
אוסטרליה
אנטארקטיקה

Jews Under Muslim world

முஸ்லீம் தேசத்தின் கீழ் யூதர்கள்

- முஸ்லீம்களின் எழுச்சி: கி.பி 622 மற்றும் 732 க்கு இடையில் இஸ்லாமியர்களின் அசூர வளர்ச்சியானது மேற்கே ஸ்பெயின் தேசத் திலிருந்து கிழக்கே வட ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள், ஈரான்வரை முஸ்லீம் படைகள் கைப்பற்றியிருந்தன. இந்த காலகட்டத்தில் உலகில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு யூதர்கள் இஸ்லாமியர்களால் ஆளப்பட்டார்கள்.
- முஸ்லிம்களின் கீழ் யூதர்கள்: கிபி 8 ம் நூற்றாண்டிற்கு பிறகு இஸ்லாமியர்களின் எழுச்சி, யூதர்களின் மத, கலாச்சார, சமூக, பொருளாதார, சட்டம், புவியியல் மற்றும் மொழியியல் அமைப்புகளில் பெரிய மாற்றம் கண்டது. அரசாங்கத்திற்கு யூதர்களும், கிறிஸ்தவர்களும் முறையாக ஜிஸ்யா (Jizya) என்ற சிறப்பு வரியை தொடர்ந்து செலுத்தின வரைக்கும், அவர்களின் வாழ்க்கையில் முஸ்லிம்கள் குறுக்கிடவில்லை.
- மதீனாவின் அரசியலமைப்பு சட்டம்: கிபி 7-9 ஆம் நூற்றாண்டில் முஸ்லீம்கள், உலகில் பெரும்பாலான தேசத்தை வென்று, முஸ்லிம் அல்லாதவர்களுக்கு திம்மி (Dhimmi) படி, யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் இரண்டாம்தர குடிமக்கள் ஆக்கப்பட்டார்கள். இதன்படி, முஸ்லிம்களுக்கு எதிரான வழக்குகளில், யூதர்களின் சாட்சிகள் செல்லுபடியாகாது என்றும், முஸ்லிம்களை விட யூதர்கள் உயர்ந்த வீடுகளில் வசிக்க கூடாது, யூதர்கள் ஆயுதங்களையும் எடுத்து செல்ல கூடாது, யூதர்கள் குதிரைகளை சவாரி செய்ய கூடாது என்றும் பல தடைகள் விதிக்கப்பட்டது. முஸ்லிம்கள் யூத பெண்களை திருமணம் செய்யலாம் ஆனால் யூதர்கள், முஸ்லிம் பெண்களை திருமணம் செய்யகூடாது. யூதர்கள் குறிப்பிட்ட ஆடைகள் மட்டுமே அணியவேண்டும் என்றும் அதிகப்படியான குடியுரிமை வரி மற்றும் நில வரி செலுத்த வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப் பட்டார்கள். ஆனால் கிபி 9 ம் நூற்றாண்டுல் இருந்து இஸ்லாமிய கலிபாக்கள் ஆட்சியின் கீழ், யூதர்கள் ஆபத்தான, மோசமான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டார்கள்.


The Spread of Islam
632
by birth
750 to 1500
by trade
632 to 750
by conquest
1500 to present
by migration

What is Anti-Semitism?
யூத எதிர்ப்பு என்றால் என்ன?

- <u>யூத எதிர்ப்பு</u>: Anti-Semitism என்பது யூதர்களுக்கு எதிரான விரோத போக்கு, தவறான கண்ணோட்டம், இழிவாக எண்ணுதல் மற்றும் பாரபட்சம் காட்டுவது போன்றவை ஆகும்.

- <u>யூத-விரோதத்தின் வெளிப்பாடு</u>: கிறிஸ்தவர்கள் கூறிய ஆறு பெரிய காரணங்கள்: 1). மத (Religious) ரீதியில் யூதர்கள் இயேசுவை கொலை செய்தவர்கள், 2). பொருளாதாரம் (Economic) ரீதியில் யூதர்கள் வங்கிகளையும் வட்டிகடைகளை நடத்தி, பண வெறி பிடித்தவர்களாக நடந்து கொண்டார்கள், 3). சமூக (Social) ரீதியில் யூதர்கள் மனிதர்களின் உழைப்பை சுரண்டுபவர்களாக காலம் காலமாக சித்தரிக்கப் பட்டார்கள். 4). இன (Race) ரீதியில், ஜெர்மனியர்களைவிட தாழ்ந்தவர்கள் என்று அடையாள படுத்தப்பட்டார்கள், 5). கொள்கை ரீதியில் (Ideological) யூதர்கள், கலகம் விளைவிப்பவர்களாக கருதப்பட்டார்கள் 6). கலாச்சார (Cultural) ரீதீயில் யூதர்கள் தார்மீக பொறுப்பில்லாதவர்களாக (Moral Responsibility) புரிந்துகொள்ளப் பட்டார்கள்,

- <u>ஏன் யூத-விரோதம்?</u>: 1). கிறிஸ்தவத்திற்கு முந்தய கிரேக்க மற்றும் ரோமானியர்கள் யூதர்களிடம் காட்டிய விரோத போக்குகள் கலாச்சாரம் சம்பந்தப்பட்டது. 2). கிறிஸ்தவர்கள் யூத மதத்திற்கு எதிர்ப்பு கான்பித்தது மதம் சம்பந்தப்பட்டது. 3). முஸ்லீம் யூத எதிர்ப்பு கான்பித்தது வர்க்க போராட்டம் (Class Strugle) சம்பந்தப்பட்டது. 4). அறிவொளிக்கு பிந்தைய ஐரோப்பாவில் (Post Enlightenment Europe 1600) அரசியல், சமூக மற்றும் பொருளாதார யூத-விரோதம், யூத இன விரோதத்திற்கு அடித்தளத்தை அமைத்தன 5). மதத்தை அடிப்படையாகக் கொண்டு, தீவிர தேசியவாதம் (Hyper Nationalism) மற்றும் தாங்கள் உயர்ந்த இனத்தை (Higher Race) சேர்ந்தவர்கள் என்ற கொள்கை; ஜெர்மனியின் நாஜி கட்சி இரண்டாம் உலகப்போரின் போது, உலக அளவில் யூத இன அழிப்பு உச்சக்கட்டத்தை அடைந்தது.

The Antisemitism in Islam
முதலாம் கலீப் உமர்





قُلْ هَلْ أُنَبِّئُكُم بِشَرٍّ مِّن ذَٰلِكَ مَثُوبَةً عِندَ ٱللَّهِ ۚ مَن لَّعَنَهُ
ٱللَّهُ وَغَضِبَ عَلَيْهِ وَجَعَلَ مِنْهُمُ ٱلْقِرَدَةَ وَٱلْخَنَازِيرَ وَعَبَدَ
ٱلطَّٰغُوتَ ۚ أُو۟لَٰٓئِكَ شَرٌّ مَّكَانًا وَأَضَلُّ عَن سَوَآءِ ٱلسَّبِيلِ ٦٠

A key Qur'anic verse in negative Islamist representations of the Jews is Al-Ma'idah 5:60:

Say (Muhammad, to the People of the Book): "Shall I point out to you something much worse than this, regarding the recompense from Allah? Those (Jews) who incurred the curse of Allah and His wrath, those of whom (some) He transformed into apes and swine, those who worshipped evil: these are (many times) worse in rank, and far more astray from the right path."

- <u>1).இஸ்லாமிய யூத எதிர்ப்புகள்:</u> இது யூத மதத்திற்கு எதிரான இஸ்லாமிய போதனைகள் ஆகும். யூத–விரோத பிரச்சாரங்களில் யூதர்கள் மோசமானவர்கள், இஸ்லாமியர்களின் எதிரிகள், நம்பத்தகாதவர்கள், தேச துரோகிகள், முஸ்லிம்களை சுரண்டு பவர்கள், முஸ்லீம் பெண்களை தறக்குறைவாக நடத்து பவர்களாகவும் மத போதனைகளில் சித்தரித்தார்கள்.
- <u>2).முதலாம் கலீப் உமர்:</u> கி.பி 641 இல், முகம்மது நபியின் வாரிசான கலீப் உமர் என்பவர், அரேபியா தீபகற்பத்தில் இல்லாமிய மதத்தை தவிர வேறு மதங்கள் இருக்கக்கூடாது என்று யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் வெளியேற கட்டளை யிட்டார். யூதர்கள், அல்லாவின் நிரந்தர எதிரிகள்தான் என்று குறிப்பிட்டார். முஸ்லிம்களை யூதர்களாக மதமாற்றம் செய்வது, புதிய ஜெப ஆலயங்கள் கட்டுவது, மற்றும் யூத மதசடங்குகள் எல்லாவற்றையும் தடை செய்தார். யூத ஜெப ஆலயங்கள் மற்றும் கிருஸ்தவ தேவாலயங்கள் மசூதிகளாக மாற்றபட்டது.
- <u>3). யூத எதிப்பு வன்முறைகள் (Persecution):</u> கிபி 627 மதீனாவில் ல் யூதர்கள் முஸ்லிம்களாக மாறதற்கும், முகம்மதுவின் வார்த்தைக்கு கீழ்படியாததால் 900 யூதர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களின் மனைவிகள் மற்றும் பிள்ளைகளை தங்களுக்கு வைத்துக்கொன்டர்கள். மேலும் 17, 000 யூதர்களை வெளியேற்றினார்கள்.
- <u>4).கலிபாக்கள் ஆட்சில் யூதர்கள்:</u> கிபி 10 ம் நூற்றாண்டில் ஏமனில் வசித்த யூதர்கள் வலுக்கட்டாயமாக இஸ்லாமியத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்டார்கள். யூத ம.தம் தவறான நம்பிக்கையை போதிக்கிறது, ஆகவே தடை செய்யப்பட வேண்டும் என்று கலிப்பாக்கள் கூறி, யூதர்களை வெறுத்து, அவர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டார்கள். யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள், முஸ்லிமாக மாறாவிட்டால், மரணத்தை எதிர்கொள்ள வேண்டும் அல்லது நாட்டைவிட்டு வெளியேற்றப்பட கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

The Antisemitism in Islam
இஸ்லாத்தில் யூத வெறுப்புகள்

"All the News That's Fit to Print"

The New York Times.

LATE CITY EDITION

Section 1

JEWS IN GRAVE DANGER IN ALL MOSLEM LANDS

Nine Hundred Thousand in Africa and Asia Face Wrath of Their Foes

LAKE SUCCESS, N. Y., May 15—For nearly four months, the United Nations has had before it an appeal for "immediate and urgent" consideration of the case of the Jewish populations in Arab and Moslem countries stretching from Morocco to India.

servants in the employ of the Syrian Government have been discharged. Freedom of movement has been "practically abolished." Special frontier posts have been established to control movements of Jews.

In Iraq no Jew is permitted to leave the country unless he deposits £5,000 ($20,000) with the Government to guarantee his return. No foreign Jew is allowed to enter Iraq even in transit.

In Lebanon Jews have been forced to contribute financially to

UPROOTED: How 3000 Years of Jewish Civilization in the Arab World Vanished Overnight

- 5). Mowza Exile: கிபி 1679 ஆம் ஆண்டில், ஏமனின் முஸ்லீம் ஆட்சியாளர் Imam Al-Mahdi Ahmad யூதர்கள் இஸ்லாத்திற்கு மாறினால் தங்கள் நாட்டில் குடியிருக்க அனுமதிக்கப்படுவார்கள், இல்லையெனில் வாளால் வெட்டி கொல்லப்படுவார்கள் என்று எச்சரித்தார். மதம் மாறாத யூதர்களை அந்த நாட்டின் மிக வெப்பமான, வறண்ட பகுதியான Mawza க்கு அனுப்பினார். போகின்ற வழியில் சுமார் 6,300 யூதர்கள் இறந்துவிட்டார்கள், உயிரோடு இருந்தவர்கள் கடுமையான வறண்ட நிலபரப்பில் வாழும்படி நிர்பந்திக்கப்பட்டார்கள். இதில் 12,000 யூதர்கள் மரித்துபோனர்கள் இது Mawza Exile என்று அழைக்கப்படுகிறது.
- <u>6).கட்டாய மதமாற்றம்</u>: கிபி 1224 ம் ஆண்டுகளில் Marinid சுல்தான் மொராக்கோவில் சுமார் 60,000 யூதர்களை நாடுகடத்தி, அங்கு இருந்த எல்லா ஜெப ஆலயங்களையும் இடித்துத் தள்ளினார்கள். கிபி 1146 ஆம் ஆண்டில், மொராக்கோவில் சுமார் 1,00,000 யூதர்களும், மராகேஷில் (Marrakesh) சுமார் 1,20,000 யூதர்களும் முஸ்லிமாக மதம் மாறாததற்காக நாட்டைவிட்டு வெளியேற்றப் பட்டபட்டர்கள். கிபி 1657-1662 ஆம் ஆண்டில், ஏமனில் பெர்சியாவின் இரண்டாம் அப்பாஸ் 7,000 யூதர்களை இஸ்லாமியத்திற்கு கட்டாய மதமாற்றம் செய்தார்.
- <u>7).இனப்படுகொலைகள்</u>: இஸ்லாமியர்களின் யூத எதிர்ப்பு இனப்படுகொலையில் முடிந்தது. கிபி 1032 ல் வடஆப்ரிக்க நாடான மொராக்கோவில் சுமார் 6,000 யூதர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். கிபி 1066 ஆம் ஆண்டில் ஸ்பெயினின் கிரனாடா (Granada) நகரில் சுமார் 4,000 யூதர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். கிபி 1165 ஆம் ஆண்டில், வடக்கு ஆப்ரிக்காவில் அல்மோஹாத் வம்சத்தார் (Almohad Dynasty) மதம் மாறாத 80,000 கிறிஸ்தவர்களையும் யூதர்களையும் படுகொலை செய்தார்கள். முஸ்லீம் ஆட்சியில் வாழ்ந்த கிறிஸ்த வர்களை விட, யூதர்கள் தான் கடுமையான அவமானத்தையும், துன்புறுத்தல்களையும் இனப்படுகொலை யையும் சந்தித்தார்கள்.

Christianity and Anti-Semetism
கிறிஸ்தவத்தில் யூத-எதிர்ப்புகள்



- 1).<u>யூத-எதிர்ப்புகள்</u>: இது கிறிஸ்தவ திருச்சபைகள், கிறிஸ்தவ குழுக்கள், யூத மதம் மற்றும் யூத மக்களுக்கு எதிராக கான்பித்து அவர்களை அவமானப்படுத்துவது, வன்முறையை கையாழுவது மற்றும் படுகொலை, செய்வது போன்றதாகும்.
- <u>2).ஏன் யூத-விரோதம்?</u>: இயேசு கிறிஸ்துவை யூதர்கள் கொலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டுதான், மிக முக்கியமானதாகும். கிறிஸ்தவர்களின் இந்த எதிர்புகளுக்கு, இரு மதத்தின் இறையியல் வேறுபாடுகள், திருச்சபை மற்றும் ஜெப ஆலயங்களுக்கு இடையேயான போட்டிகள், யூதர்களை, கிறிஸ்தவத்திற்கு மதமாற்றம் செய்வதற்கு கான்பித்த வேகம், யூதர்களின் நம்பிக்கைகளை கிறிஸ்தவர்கள் தவறாக புரிந்துகொண்டது மற்றும் யூத மதம், கிறிஸ்தவத்திற்கு விரோதமானது என்ற போதனைகளால் யூத-கிறிஸ்தவ விரோதம் வேகமாக வளர்ந்தது.
- <u>3).புதிய ஏற்பாட்டின் தவறான அனுகுமுறை</u>: புதிய ஏற்பாடு, யூத எதிர்ப்பு நோக்கங்களுக்காக கிறிஸ்தவர்களால் தவறாக பயன்படுத்தப்பட்டது. 1). இயேசுவானவர் எருசலேம் ஆலத்தை சுத்தப்படுத்தியது, அத்திமரத்தை சபித்ததையும் கிறிஸ்தவர்கள் இயேசுவானவர் யூதமதத்தையும் யூதர்களையும் குறிப்பிட்டார் என்று போதித்தார்கள் (மாற்கு 11: 13-19) 2). திராட்சைத் தோட்டத்தின் உவமையில், குத்தகைதாரர்களை யூதர்களாக (Mk 12: 1-12), 3). இயேசுவானவர், பரிசேயர்களின் தகப்பன் பிசாசு என்று கூறியதால் யூதர்கள் எல்லோரும் பிசாசுகள் என்று (மத் 23: 31-33). 4). யூதர்கள் இருளோடும் பிசாசுடனும் சேர்ந்தவர்கள் என்று (யோவா 8: 37-47). 5). இயேசுவை கொன்ற இரத்தபழி யூதர்களுக்கு நேரிடுகிறது என்று (மத் 27:25). யூதர்கள் இயேசுவையும் அவரது சீஷர்களையும் கொலைசெய்ய முயற்சி செய்த யூதர்களுக்கு, பாடம் கற்பிக்க வேண்டும் என்று திருச்சபை போதித்தது (யோவா 7:1-9, 20:19). இவ்வாறு புதிய ஏற்பாட்டில் சுமார் 400 வசனங்களை தவறாக மேற்கோள் காட்டி, கிறிஸ்தவ திருச்சபைகள், யூதர்களை அழிக்க போதித்தார்கள்.

Antisemitism in Christianity
கிறிஸ்தவத்தில் யூத எதிர்ப்பு



> "There is no salvation outside the Catholic Church. Anyone who resists this truth PERISHES ."
>
> Acts 4:12

- <u>5).ஆதி திருச்சபை தந்தையர்களின் யூத எதிர்ப்புகள் (Early Church Fathers)</u>: 1).சர்தை திருச்சபையின் பேராயர் மெலித்தோ, இயேசுவை கொலை செய்தற்காக யூதர்கள் அனைவரும் குற்றவாளிகள் என்று போதித்தார். 2). தெர்துலியன் என்ற ஆயர், யூதர்களை மதமாற்றம் செய்ய, கடவுள் பிற இனத்தவராகிய கிறிஸ்தவர்களை தேர்ந்தெடுத்துள்ளார் என்று போதித்தார். 3). பேராயர் சைப்ரியன், திருச்சபைக்கு வெளியே யாரும் இரட்சிக்கபட முடியாது. ஆகவே யூதர்கள், கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்யப்பட வேண்டும் என்று போதித்தார். 4).புனித அகஸ்டின், என்பவர் கடவுள் யூத மக்களுடன் ஏற்படுத்தியிருந்த பழைய உடன்படிக்கை முடிவடைந்து, பிற இனத்தவரோடு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். இப்போது கிறிஸ்தவர்கள்தான் புதிய இஸ்ரவேலர்கள் என்று போதித்தார். ஆகவே யூதர்கள் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். 5). ஜான் கிறிஸ்தெந்தோம் என்பவர், மாம்சத்தில் வந்த கிறிஸ்துவை யூதர்கள் நிராகரித்ததால், அவர்கள் கொல்லப்படுவதற்கு தகுதியானவர்கள் என்று போதித்தார் (லூக் 19:27). 6). புனித ஜெரோம் என்பவர் யூதர்களை, யூதாஸ்காரியோத்துடன் ஒப்பிட்டு, யூதர்கள் தீமையானவர்கள் என்றும், ஒழுக்கக்கேடாய் பணம் சம்பாதிக்கிறவர்கள் என்றும் கூறி, யூதர்கள் அழிக்கப்பட வேண்டும் என்று போதித்தார். 7). பேராயர் அம்ப்ரோஸ் என்பவர், யூதர்களின் ஜெப ஆலயங்களை எரிப்பது சரிதான் என்று போதித்து, பல ஜெப ஆலய எரிப்பை முன்னின்று நடத்தி, தனது ஆதரவாளர்களை ஜெப ஆலயத்தை எரிக்க ஊக்கப்படுத்தினார்.
- <u>6). திருச்சபையின் வெறுப்பு</u>: இவ்விதமான போதனைகளும், எழுத்துக்களும் இடைக்கால (Middle Age) திருச்சபை சரித்திரத்தில் (500-1500 AD) யூதர்கள் மீதான கிறிஸ்தவ அணுகுமுறைகளை மாற்றியது. இதனால் யூத சமூகங்கள், பலமுறை திருச்சபை மூலமாக துன்புறுத்தல்களை சந்தித்தது.

Antisemitism in Christianity
கிறிஸ்தவத்தில் யூத எதிர்ப்பு

- <u>7). யூதர்களுக்கு எதிரான சட்டங்கள்</u>: யூதர்களுக்கு எதிராக கிறிஸ்தவ திருச்சபை மன்றங்கள் மூலம் ரோமானிய பேரரசில் சட்டங்கள் இயற்றப்பட்டது. 1)கிபி 306 ல் எல்விரா (Elvira) திருச்சபை மன்றத்தில், கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே திருமணம் நடைபெறுவது தடைசெய்யப்பட்டது. 2).கிபி 341 அந்தியோகியா திருச்சபை மன்றத்தில், கிறிஸ்தவர்கள் யூதர்களுடன் பஸ்கா பண்டிகை கொண்டாடுவது தடை செய்யப்பட்டது. 3).கிபி 363 லவோதிக்கேயா திருச்சபை மன்றத்தில், கிறிஸ்தவர்கள் யூதர்களின் ஓய்வுநாளில் கலந்துகொள்வது தடை செய்யப்பட்டது. 4).கிபி 380 ல் ரோமானிய பேரரசர் முதலாம் தியோடோசியஸ், யூதர்கள், கிறிஸ்தவ, ரோமானிய அடிமைகளை விருத்தசேதனம் செய்வது தடைசெய்தார். கிறிஸ்தவர்களை யூத மதத்திற்கு மாற்றுவதும் சட்டவிரோதமம் என்று அறிவிக்கப்பட்டது. 5).கிபி 438 ல் யூதர்களுக்கு ரோமானிய பேரரசில் அரசாங்க வேலை, மற்றும் ராணுவத்தில் சேருவது தடைவிதிக்கப்பட்டது. யூதர்கள் வழக்கறிஞர் தொழில் செய்வதும் தடைவிதிக்கப்பட்டது.

- <u>8). சிலுவைப் போரில் யூத இனப்படுகொலைகள்</u>: கிபி 1096 ஆம் ஆண்டில், கிறிஸ்தவத்தின் எதிரிகள் நம்மிடையே வாழும்போது ஏன் வெளிநாடுகளில் போரிடவேண்டும் என்று போப் கூறியதால், ஜெர்மனில் Rhineland நகரில் சுமார் 2, 800 யூதர்கள் கொல்லப்பட்டார்கள். கிபி 1126 ல் ஜெர்மனியின் வார்ம்ஸ் (Worms) நகரில் ஜெப ஆலயத்தைத் தாக்கி 800 யூதர்கள் படுகொலை செய்தார்கள். ஜெர்மனியின் மெய்ன்ஸ் (Mainz) நகரில் வலுகட்டாயமாக மதமாற்றம் செய்யும்போது 1,200 யூதர்கள் தற்கொலை செய்துகொண்டார்கள். மேலும் சுமார் 5000 யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர். கிபி 1236 ம் ஆண்டு திருச்சபை மூலம் அனுப்பப்பட்ட சிலுவைப்போர் வீரர்கள், பிரான்ஸ் தேசத்தில் Anjou மற்றும் Poitou நகரில் யூதர்களை வலுக்கட்டாமாக மதமாற்றம் செய்யும்போது நடந்த கலவரத்தில் சுமார் 3,000 யூதர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

Antisemitism in Christianity
கிறிஸ்தவத்தில் யூத எதிர்ப்பு



- <u>9).பஸ்கா பலி</u>: கிபி 1255 ல் பிரான்சு தேசத்தில் Menz நகரில் யூதர்கள் பஸ்கா பண்டிகையின்போது கிறிஸ்தவ குழந்தைகளை கொன்று யூத சடங்குகளை நடத்துகிறார்கள் என்று குற்றஞ் சாட்டியதால் ஏற்பட்ட கலவரத்தில் நூற்றுக்கணக்கான யூதர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இது தவறான குற்றச்சாட்டு ஆகும்.
- <u>10).கருப்பு மரணம் (Black Death)</u>: கிபி 1347-1351 வரை, ஐரோப்பாவில் பிளேக்நோய் ஏற்பட்டு இலட்சக்கணக்கான மக்கள் மரித்துப்போனார்கள். இது Black Death என்று அழைக்கப்படுகிறது. இதற்கு யூதர்கள் கிணற்று தண்ணீரில் விஷத்தை கலந்ததினால் ஏற்பட்டது குற்றஞ்சாட்டப்பட்டது. ஏனெனில் இதில் இந்த நோயில் யூதர்கள் மிக குறைந்த அளவில் இறந்தார்கள். இதனால் ஆயிரக்கணக்கான யூதர்களின் கடைகள் சூரையாடப்பட்டு, வீடுகள் எரிக்கப்பட்டு சுமார் 17,000 யூதர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். மேலும் 1240 குழந்தைகள் வலுக்கட்டாயமாக கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றப்பட்டார்கள். யூதர்களுக்கு எதிரான இனப்படுகொலைகள் ஸ்பெயின், பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம், போலந்து மற்றும் ஆஸ்திரியா முழுவதும் பரவின. இதனால் சுமார் 20,000 க்கும் மேற்பட்ட யூதர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள்.
- <u>11). நாட்டை விட்டு வெழியேற்றம்</u>: கிபி 1305 ஆம் ஆண்டில், பிரான்சு மன்னர் நான்காம் பிலிப், கிறிஸ்தவர்களாக மதம் மாறாத சுமார் 1,00,000 யூதர்களை நாட்டிலிருந்து வெளியேற்றி, அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்தார். கிபி 1396 ஆம் ஆண்டு, இங்கிலாந்தில் கிறிஸ்தவர்களாக மதம் மாறாத 1,20,000 யூதர்கள் வெளியேற்றப்பட்டார்கள். இதைப்போலவே கிபி 1421 ம் ஆண்டு சுமார் 1,27,000 யூதர்கள் ஆஸ்திரியா மற்றும் போலந்து நாடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். கிபி 1492 ஆம் ஆண்டு ஸ்பெயின் தேசத்து மன்னர் இரண்டாம் Ferdinand என்பவர் சுமார் 50,000 யூதர்களை கிறிஸ்தவர்களாக மதம்மாற்றினார், மதம்மாறாத சுமார் 2,00,000 யூதர்கள் வெளியேற்றப்பட்டார்கள்.

Antisemitism in Christianity
கிறிஸ்தவத்தில் யூத எதிர்ப்புகள்

- <u>13).திருச்சபையின் வன்முறைகள் (Inquisition)</u>: கிபி 1298 ல் ஜெர்மனியில் நடந்த உள்நாட்டுப் போரின்போது, கிறிஸ்தவ வன்முறை கும்பல்கள் சுமார் 1,00,000 யூதர்களை இனப்படுகொலை செய்தார்கள். கிபி 1328 ம் ஆண்டு பிரான்சு தேசத்தில் யூதர்களால் Franciscan என்ற ஒரு கத்தோலிக்க மதகுரு கொல்லப்பட்டதற்காக, சுமார் 5,000 யூதர்களை கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் படுகொலை செய்து, அவர்களது வீடுகளை தீயினால் எரித்தார்கள். கிபி 1354 ம் ஆண்டு ஸ்பெயின் தேசத்தின் பார்சிலோனாவில் 10,000 யூதர்கள் வலுக்கட்டாயமாக கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றப்பட்டார்கள். கிபி 1478 ஆம் ஆண்டில், ஸ்பெயின் தேசத்தில் சுமார் 30,000 யூதர்கள் திருச்சபையின் எதிரிகள் என்று குற்றம் சாட்டப்பட்டு அவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டது. கிபி 1656 ஆம் ஆண்டு போர்ச்சுகலில் கத்தோலிக்கர்களின் டொமினிகன் சங்கத்தினர்கள், யூதர்கள் துர்உபதேசக்காரர்கள் என்றும் திருச்சபையின் எதிரிகள் என்றும் குற்றஞ்சாட்டி சுமார் 2,000 யூதர்களை படுகொலை செய்தார்கள். செக்கோஸ்லாவியாவின் Prague நகரில் கிறிஸ்தவர்கள், யூதர்களின் ஜெப ஆலயங்களில் தாக்குதல் நடத்தியதில் சுமார் 3,000 யூதர்கள் கொல்லப்பட்டார்கள்.

- <u>14).யூதமத வெறுப்பு</u>: கடந்த 1900 ஆண்டுகால கிறிஸ்தவ திருச்சபை வரலாற்றில், கிறிஸ்தவர்கள் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் வசித்த யூதர்களை வெறுத்து, ஜெப ஆலயங்களை அழித்து, கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டு, யூதர்களுக்கு எதிராக வன்முறை மற்றும் இனப்படுகொலைகளை அரங்கேற்றினார்கள். ஐரோப்பா கண்டம் முழுவதும் கிறிஸ்தவர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததால், யூதர்களுக்கெதிராக கடுமையான எதிர்ப்புகள் காட்டப்பட்டது. ஐரோப்பாவில் யூதர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதால் முஸ்லிம் தேசத்திற்கும், சோவியத் நாடுகளுக்கும் சென்று அடைக்கலம் புகுந்தனர். அங்கும் யூதர்கள் தங்கள் மதத்தையும், இனத்தையும், கலாச்சாரத்தையும், தேசிய அடையாளத்தையும் பாதுகாத்துக் கொண்டார்கள்



Lithuania
1445
1495
Wales
1290
England
Holland
1159
Poland
Silesia
1100s
1494
France
Germany
1348
1350
1306
Austria
1016
1421
Crimea
Hungary
Provence
1349-1360
1490
Portugal
1497
Spain
Italy
Ottoman
1492
Empire
Sardinia
To
Brazil
1492
Sicily
Maghreb
1492
Areas of Expulsion
Resettlement Areas

Martin Luther and Anti-Semitism
மார்ட்டின் லூத்தரின் யூத எதிர்ப்பு

- <u>மார்ட்டின் லூத்தர்</u>: இவர் சீர்திருத்த திருச்சபையின் தலைவராவார். இவர் மூலமாக திருச்சபையில் ஏற்பட்ட சீர்திருத்தத்தில், யூதர்கள், கிறிஸ்தவர்களாக மதம் மாறுவார்கள் என்று எதிர்பார்த்தார். ஆனால் அப்படி எதுவும் நடக்காததால் யூதர்களுக்கு எதிராக அநேக அறிக்கை வெளியிட்டார். ஜெர்மனி தேசத்தின் பல இடங்களுக்கும் சென்று யூதர்களுக்கு எதிராக லூத்தர் பிரச்சாரம் செய்தார்.

- <u>எட்டு அம்ச கோட்பாடுகள்</u>: 1543 ஆம் ஆண்டில் மார்ட்டின் லூத்தர் கிறிஸ்தவர்களாக மதம் மாறாத யூதர்களுக்கு எதிரான எட்டு அம்ச கோட்பாடுகளை அறிவித்தார்.: 1). யூதர்களின் ஜெப ஆலயங்கள், பள்ளிகளுக்கு தீ வைக்கவும், 2)... யூதர்களின் வீடுகளும் இடிக்கப்பட்டு, அழிக்கப்பட வேண்டும். 3). யூதர்களின் ஜெப புத்தகங்களும், தால்மூத் விளக்க உரைகள் அவர்களிடமிருந்து எரிக்கப்பட வேண்டும். 4). யூத ரபீமார்கள் இனிமேல் யூத குழந்தைகளுக்கு கற்றுகொடுக்கமுடியாதபடி விரல்கள் துண்டிக்கப் பட வேண்டும். 5) நெடுஞ்சாலைகளில் பயணம் செய்யும் யூதர்களுக்குகான பாதுகாப்பு முறைகள் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும். 6). யூதர்கள் வங்கிகள் நடத்துவது, வட்டி கடைகள் நடத்துவது தடைசெய்யப்பட வேண்டும். மேலும் அவர்களின் பொன், வெள்ளி மற்றும் பணம் யாவு கைப்பற்றப்பட வேண்டும். 7). யூதர்கள் உணவுக்காக கஷ்டபட்டு, வியர்வை சிந்தி சம்பாதிக்க வேண்டும். 8). யூதர்களை நம் நாட்டிலிருந்து விரட்ட வேண்டும்.

- <u>லூத்தரின் ஆதரவாளர்கள்</u>: மார்டின் லூத்தரின் தொண்டர்கள், யூதர்களுக்கு விரோதமாக போராட்டங்களை நடத்தி 1572 ல் ஜெர்மனியில் பெர்லினில் உள்ள யூதர்களின் ஜெப ஆலயத்தை தீயிலிட்டு கொளுத்தி, அங்கிருந்த எல்லா யூதர்களையும் ஜெர்மனியில் இருந்தே விரட்டிவிட்டார்கள். மாட்டின் லூதர் போதித்த ஆலயத்தில் யூதர்களை குறிப்பிடுவதற்காக பன்றியின் பால் மற்றும் மோத்திரம் (Urine) உறிஞ்சுபவர்களாக கொண்ட சிற்பங்கள் வைக்கப்பட்டது. இதன் முலம் யூதர்கள் எவ்வாறு கிறிஸ்தவர்களால் பார்க்கப் பட்டார்கள் என்பதை காணமுடியும்.

Jews in the Soviet Union
சோவியத் யூனியனில் யூதர்கள்



- 1). Pale Settlement யூதர்கள்: கிபி 16 ம் நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பாவில் யூதர்களுக்கு எதிராக கட்டாய மதமாற்றமும், இன அழிபினால் இலட்சகணக்கான யூதர்கள் சோவியத் யூனியனுக்கு புலம் பெயர்ந்தார்கள். பெரும்பாலோர் வறுமை யில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் நகரத்திற்குள் நுழையாமல் இருக்கும்படி தனிமை படுத்தி, உக்ரைன், பெலாரஸ், லிதுவேனியா, மற்றும் போலந்து தேசங்களின் ஒதுக்குபுறத்தில் குடியமர்த்தப் பட்டார்கள். இது Pale of Settlement என்று அழைக்கப் பட்டது. 1880 ல் சுமார் 50 இலட்சம் யூதர்கள் சோவியத் யூனியனில் வாழ்ந்து வந்தார்கள்.
- 2). யூத எதிர்ப்புகள்: கிபி 1881, மார்ச் 13 ம் தேதி, சோவியத் யூனியனின் மன்னர் சார் அலெக்சாந்தர் படுகொலை செய்யப்பட்டதால், யூதர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் மிகவும் தீவிரமடைந்தது. மன்னரின் படு கொலையில் யூதர்களுக்கு தொடர்பு உண்டு என்று குற்றஞ் சாட்டப்பட்டது. உக்ரைன் நாட்டின் தென்மேற்கு மாகாணங்களின் 166 நகரங்களில், சுமார் 5,000 யூத ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் இனப் படுகொலை செய்யப்பட்டார்கள்.
- 3).மே சட்டங்கள் (May Laws): கிபி 1882 ல் சோவியத் யூனியனின் புதிய மன்னர் சார் மூன்றாம் அலெக்சாண்டர், யூதர்களுக்கு எதிராக கடுமையான கட்டுப்பாடுகள் கொண்ட மே சட்டங்களை (May Laws) கொண்டு வந்தார். சோவியத் யூனியனின் அரசாங்க அதிகாரிகள், நகரத்தில் இருந்த யூதர்களைவிட Pale of Settlement பகுதியில் இருக்கும் யூதர்கள் மிகவும் பயங்கரமானவர்கள் மற்றும் ஆபத்தானவர்கள் என்று கருதி, சுமார் 10,000 யூதர்களை அங்கு படுகொலை செய்தார்கள். மேலும் இங்கு வசித்த யூதர்கள், ரஷ்யாவுக்குள் குடியேற தடை விதிக்கப்பட்டது. அரசாங்கத்தின் அடக்குமுறையால் பாரபட்சமாகவும் சொல்லொன்னா துன்புறுத்தலையும் அனுபவித்து வந்தார்கள்.

LIFE IN
The Pale of
Settlement

THE PALE OF SETTLEMENT
SWEDEN
ESTONIA
RUSSIA
LATVIA
DENMARK
LITHUANIA
BELARUS
POLAND
GERMANY
CZECH
SLOVAKIA
UKRAINE
MOLDOVA
HUNGARY

Anti-Semitism in the Soviet Union
சோவியத் யூனியனில் யூத எதிர்ப்புகள்



- 4). ஒடெஸா (Odessa) படுகொலை: சோவியத் யூனியனின் உக்ரேன் பகுதிகளில் 1903 – 1906 ல் யூதர்களுக்கு விரோத மாக தொடர் படுகொலைகள் நடத்தப்பட்டது. யூதர்களின் தொழிற்சாலைகள், நிறுவனங்கள் எல்லாம் அழிக்கப்பட்டது. இதில் 22,000 யூதர்கள் கொல்லப்பட்டார்கள். பெசராபியா மாகாணத்தில் 64 நகரங்களையும் 626 சிறு கிராமங்களிலும் சுமார் 12,000 யூதர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள்.
- 5). வெள்ளை பயங்கரவாதம் (White Terror): இது 1917-23 வரை ரஷ்யாவில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் போது, வெள்ளை இராணுவத்தால் (White Army), பேல் குடியுருப்பு யூதர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வெகுஜன படுகொலையை (Mass Killing) குறிக்கிறது. இந்த உள்நாட்டுப் போரின்போது, இனப் படுகொலையில் பாதிக்கபட்ட யூதர்கள் சோவித் யூனியன் எதிர்ப்பு படையான மக்கள் குடியரசு படையுடன் இணைந்து கொண்டதால் சோவித் யூனியன் இராணுவம் சுமார் 22,000 யூதர்கள் உட்பட சுமார் 1,25,000 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.
- 6).உக்ரேன் இனப்படுகொலை: கிபி 1919 ம் லெனின் தலைமையில் கம்யூனிஸ்ட்கள் ஆட்சியை பிடித்தால் சோவியத் யூனியனில் யூதர்களுக்கு எதிராக தொடர்ச்சியான வன்முறை ஏற்பட்டது. இதில் உக்ரேன் பகுதியில் யூதர்களுக்கு சொந்தமான 75,000 கடைகள் சூரையாடப் பட்டன, 267 ஜெப ஆலயங்கள் எரிக்கப்பட்டு, இடித்து தள்ளப்பட்டு சுமார் 34,000 யூதர்கள் கொல்லப்பட்டார்கள். யூதர்களுக்கு எதிராக அநேக புத்தகங்கள் எழுதப்பட்டது. யூத எதிர்ப்பாலர்களால் Kyrgyzstan, Kazakhstan, Mongolia, Uzbekistan and Tajikistan. பகுதயில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். இதனால் 1880 – 1920 க்கு இடையில் 20 இலட்சம் யூதர்கள் சோவியத் யூனியனை விட்டு வெளியேறி அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகளில் தஞ்சம் அடைந்தார்கள்.

சோவியத் யூனியனில் யூத எதிர்ப்புகள்



- <u>7).ஸ்டாலின் யூத எதிர்ப்பு</u>: 1922ம் ஆண்டு சோவியத் யூனியனின் தலைவராக ஜோசப் ஸ்டாலின் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸ்டாலினும், யூதர்களுக்கு எதிதாக சட்டங்களை இயற்றியதால், யூதர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்துகொண்டே இருந்தது.
- <u>8).ரூட்லெஸ் காஸ்மோபாலிட்டன் (Rootless Cosmopolitan)</u>: இது யூத அறிவாளிகளை சோவியத் யூனியனில் மறைமுகமாக வெளியேற்ற குறிப்பிடும் பெயராகும். இரண்டாம் உலகப் போருக்குப்பின் 1948-53 வரை சோவியத் யூனியனில் வசிக்கும் யூதர்கள் தேசபக்தி இல்லாதவர்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டு, ஏராளமான யூத அறிவு ஜீவிகள், விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இவர்கள் இராணுவ இரகசியங்கள், விஞ்ஞான ஆராய்ச்சி இரகசியங்களை இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு பகிர்ந்து கொண்டார்கள் என்று குற்றம் சாட்டப் பட்டது. இதனால் யூத விஞ்ஞானிகள், சோவியத் யூனியனின் அறிவியல் ஆய்வகங்களில் இருந்து இருந்து நீக்கப்பட்டனர், பொறியாளர்கள் இராணுவத்திலிருந்து நீக்கப்பட்டு, அவர்களுக்கு குடியேற்ற உரிமை மறுக்கப்பட்டது. அப்படியே ஆயிரக்கணக்கான யூதர்கள் வேலையிலிருந்து வெளியேற்றப் பட்டார்கள். இவர்கள் தெருக்களிலும், கடைகளிலும், பொதுப் போக்குவரத்திலும் அவமானப்படுத்தப் பட்டார்கள்..
- <u>9). ஸ்டாலின் குற்றசாட்டு (Doctor's Plot)</u>: இந்நிலையில் 1953 ம் ஆண்டு மாஸ்கோவில் யூத மருத்துவர்கள், சதி திட்டம் செய்து தன்னை கொலை செய்ய முயன்றதாக ஸ்டாலின் குற்றம் சாட்டினார். இதனால் சோவியத் அரசாங்கம் யூதர்களுக்கு எதிராக செயல்பட்டு, மருத்துவர்கள், விஞ்ஞானிகள் மற்றும் அறிவாளிகளை கைதுசெய்து, பலரை கொன்று குவித்தார்கள். இப்படியாக 1918 ல் ஆரம்பித்த முதல் உலகப்போரிலிருந்து 1991 ல் நடைபெற்ற சோவியத்

The Zion Movement
யூதர்களின் சீயோன் இயக்கம்





PALESTINE FOR THE JEWS.

OFFICIAL SYMPATHY.

Mr. Balfour has sent the following letter to Lord Rothschild in regard to the establishment of a national home in Palestine for the Jewish people :—

- 1).தியோடர் ஹெர்ஸ் (Theodore Herz): இவர் ஒரு யூதர், ஆனால் ஆஸ்திரிய நாட்டின் பத்திரிக்கையாளராக இருந்தார். 1896 ம் ஆண்டு சீயோன் இயக்கத்தை (Zion Movement) சோவியத் யூனியனில் ஏற்படுத்தினார். தியோடர் "யூத அரசாங்கம்" என்ற தலைப்பில் பத்திரிக்கைகளில் தொடர்ந்து எழுதி, உலகின் பார்வையை தன் பக்கம் திருப்பினார்.
- 2).சீயோன் சித்தாந்தங்கள்: உலகின் பல பகுதிகளிலும் வாழ்ந்த யூதர்கள் சீயோன் இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டார்கள். இது உலகமெங்கும் யூத எதிர்ப்பினால் கொல்லப்படும் யூதர்கள் பாதுகாக்கப்பட, அவர்களின் பண்டைய தாயகமான பாலதீனாவில், யூத அரசாங்கம் அமையவேண்டும் என்று குரல் கொடுத்து, உலகமெங்குமுள்ள அரசியல் தலைவர்களை சந்தித்து ஆதரவு திரட்டினார்கள்.
- 3).Balfour Declaration: பாலஸ்தீனாவில் யுது அரசாங்கம் அமைய உலக நாடுகளில் வாழ்கின்ற யூதர்கள், இங்கிலாந்து அரசுக்கு எல்லா வழிகளிலும் ஆதரவாக இரு.ப்போம் என்று சீயோன் இயக்கம் இங்கிலாந்துடன் ஒப்ந்தங்கள் செய்து கொண்டன. இதனால் பாலஸ்தீனத்தில் 3% யூதர்கள் வசித்த போதிலும் அங்கு யூத அரசாங்கம் அமைய பிரிட்டன் தனது ஆதரவை கொடுக்கும் என்று 1917 ஆம் ஆண்டில், பால்ஃபோர் பிரகடனம் (Balfour Declaration) மூலம் வெளியிட்டது.
- 4).எதிர்ப்புகள் Balfour பிரகடனத்திற்கு பாலஸ்தினத்தில் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் எதிர்த்தார்கள். இதை அரபு நாடுகள், மன்னின் மைந்தர்களை (Indigenous People) அழித்து காலனி நாடு (Colonial Nation) உறுவாக்கும் செயல் எனவும், Ottoman பேரரசில் பாலஸ்தீனாவில் இருந்த அரபியர்களுக்கு தனிநாடு கொடுக்கப்படும் என்று 1915 ல் பிரிட்டன் செய்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என்றும் 1916 ல் பிரிட்டன் செய்த சர்வதேச சட்டத்தை மீறும் செயல் என்றும் குற்றஞ்சாட்டின.

The Zion Movement
யூதர்களின் சீயோன் இயக்கம்



- 5)ஒட்டமான் பேரரசு வீழ்ச்சி: இதன் கீழ் துருக்கி, எகிப்து, யோர்தான், சிரியா, சௌதிஅரேபியா மற்றும் பாலஸ்தீனத்தை மையமாகக்கொண்டு சுமார் 600 ஆண்டுகள் இராணுவத்திலும், பொருளாதாரத்திலும், மத சகிப்பிலும் சிறந்தது விளங்கி கொஞ்சம் கொஞ்சமாக பலவீனப்பட்டு, இழந்த பலத்தை திரும்ப பெறுவதற்கு முதலாம் உலக போரின்போது கூட்டணி வைத்துகொண்டது. போரில் நடுநிலைமை வகிக்க இங்கிலாந்து தலைமையிலான நாடுகள் கேட்டபோது, ஒட்டமன் பேரரசு கடற்படைமுலம் 1914 ல் சோவித்யூனியனை தாக்கியது. இதனால் பிரிட்டனும் நட்பு நாடுகளும் Ottoman Empire க்கு எதிராகபோரிட்டு 1922 ம் ஆண்டு பாலஸ்தீனத்தை கைப் பற்றினார்கள். இப்போது ஒட்டமான் பேரரசை சோவித்யூனியன், இங்கிலாந்து, பிரான்சு பங்கு வைத்து கொண்டார்கள். இங்கிலாந்தின் கீழ் பாலஸ்தீனம் வந்தது.
- 6).யூத-பாலஸ்தீன பிரச்சினை ஆரம்பம்: முதலாம் உலகப் போருக்குபின் பாலஸ்தீனத்தில் யூத அரசாங்கம் அமைந்து விடும் என்று நம்பி, அநேக யூதர்கள் பாலஸ்தீனாவிற்கு குடிபெயர்ந்ததால் இப்போது பாலஸ்தீன மக்கள் தொகையில் யூதர்கள் 3% த்திலிருந்து 27% பேர் அதிகரித்தார்கள். இந்நிலையில் 1929-39 வரை அரேபியர்களும் யூதர்களும் பாலஸ்தீனத்தில் மோதிக் கொண்டார்கள். இதில் ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லபட்டு, இலட்சகணக்கானோர் காயம் அடைந்து, அநேக சொத்துகள் அழிக்கப்பட்டது. பாலஸ் தீனத்தில் அரேபியர்களை திருப்திப்படுத்த, யூதர்கள் இஸ்ரேலுக்குள் நுழைவதை இங்கிலாந்து அரசாங்கம் வெகுவாக கட்டுபடுத்தியது. இந்த சூழ்நிலைகளில் 1939 செப்டம்பர் மாதம் இரண்டாம் உலகப்போர் ஆரம்பிக்கவே, யூத அரசாங்கம் அமைவதை இங்கிலாந்து அமல்படுத்தவில்லை. இதற்கு சீயோன் இயக்கம், இங்கிலைந்து தங்களை ஏமாற்றிவிட்டது என்று கருதினார்கள்.


The Ottoman Empire
in 1683 AD, at its greatest extent
1300 - 1359
1359 - 1451
1451 - 1512
1512 - 1520
1520 - 1566
1566 - 1683
Vienna
Budapest
Venice
Belgrade
Sofia
Black Sea
Constantinople
Rome
Caspian Sea
Baku
Tunis
Athens
Algiers
Mediterranean Sea
Damascus
Tripoli
Baghdad
Alexandria
Jerusalem
Cairo
Medina
Mecca
Red Sea


SYKES–PICOT AGREEMENT
MAY 1916
British rule
French rule
Russian rule
Under British, French, and Russian protection
Arab state under British protection
Arab state under French protection
0 100 200 mi
0 100 200 300 km
RUSSIAN EMPIRE
TURKEY
ARMENIA
CASPIAN SEA
SYRIA
CYPRUS
PERSIA
MEDITERRANEAN SEA
IRAQ
PALESTINE
EGYPT
KUWAIT
ARABIA
PERSIAN GULF
QATAR
© Encyclopædia Britannica, Inc.

Social Darwinism and Anti-Semitism
டார்வினின் சமூக கோட்பாடு & யூத எதிப்பு









- <u>1).உயிரின பரிணாம வளர்ச்சி கோட்பாடுகள்:</u> சார்லஸ் டார்வின் 1859 ம் ஆண்டு உயிரினத்தின் வளர்ச்சி (Origin of Species) என்ற புத்தகத்தில் தாவரம் மற்றும் விலங்கினத்தின் பரிணாம வளர்ச்சி (Evolution), இயற்கையாகவே தேர்வு செய்யும் முறை (Natural Selection), தகுதியான உயிரினம் பிழைக்கும் நிலை (Survival of the fittest) பற்றி விளக்கி இருந்தார். இவருடைய எழுத்துக்கள் கிறிஸ்தத்திலும் மனித குலத்திலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.
- <u>2).டார்வினின் சமூக கோட்பாடுகள்:</u> டார்வினின் கோட்பாடுகளை மனித சமுதாயத்தின் மீது ஆராய்ச்சி ஜெர்மனியில் Herbert Spencer முலம் அடைந்தது. இவர்கள் இயற்கை தேர்வு கோட்பாடடு (Natural Selection) மற்றும் தகுதியுள்ளவர்கள் மட்டுமே வாழமுடியும் (Survaival of the Fittest) என்ற கோட்பாடுகளை சமூக, அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகளுக்கு பயன்படுத்தினார்கள். இதன்படி வாழ்க்கை போராட்டத்தில், தகுதியான உயிரினம் வாழ்வேண்டுமானால் தகுதியற்ற உயிரினங்கள் அழிக்கப்பட வேண்டும் என்பது மனிதர்களுக்கும் ஒத்துப்போனதால், தாங்கள் வாழ்வதற்க்கு, தகுதியில்லாதவர்கள் அழிக்கப்பட வேண்டும் என்ற மனநிலை ஐரோப்பிய சமூகத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.
- <u>3). யூத இனவிரோதக் கோட்பாடு (Racism's Anti-Semitism Theory):</u> இது யூதர்களுக்கு எதிராக சமூகத்தில் நிலவிய இனபாகுபாடு கோட்பாடு ஆகும். இதன்படி ஜெர்மானியர்கள் இயற்கையாகவே (Natural Selection) யூதர்களைவிட உயர்ந்த இனத்தை சேர்ந்தவர்கள் என்றும்; வாழ்க்கை போராட்டத்தில் தாங்கள் வாழவேண்டுமானால்; தகுதியில்லாத யூதர்கள் அழிக்கப்பட வேண்டும் என்ற டார்வீனின் சமூக கோட்பாடு, ஜெர்மானிய தேசத்தில் பல ஆண்டுகள் பேசப்பட்டும், எழுதப்பட்டும் போதிக்கப்பட்டும் வந்தது. இதுவே இனத்தின் அடிப்படையில் யூத எதிர்ப்புக்கு அடித்தளம் அமைத்தது.

Nazism Ideology
ஜெர்மானிய நாஜிசம் கருத்தியல்



WHAT WAS THE NAZI IDEOLOGY?

<u>Führer</u> - there should be a single leader with complete power rather than a democracy.

<u>Autarky</u> - Germany should be economically self-sufficient.

<u>A strong Germany</u> - the Treaty of Versailles should be abolished and all German-speaking people united in one country.

<u>Germany in danger</u> - from Communists and Jews, who had to be destroyed.

<u>Lebensraum</u> - the need for 'living space' for the German nation to expand.

<u>Social Darwinism</u> - the idea that the Aryan race was superior and Jews were 'subhuman'.

Mass murder of Jews and “undesirables” direct result of Nazi ideology that considered “Aryans” (white gentiles- Germanic, Nordic and Anglo-Saxon blood) superior

- <u>4). கருப்பு நிறத்தின் மீது வெள்ளை நிறத்தின் ஆதிக்கம்</u>: ஐரோப்பியர்கள் மற்றும் அமெரிக்கர்கள் டார்வினிசத்தின் சமூக மற்றும் உளவியல் அம்சங்களை ஆராய்ச்சி செய்ய தொடங்கினர். தொழில்துறையில் வெள்ளை நிற சமூகங்கள், சமூக டார்வினிசத்தைப் பயன்படுத்தி வளர்ச்சியடையாத நாட்டு மக்கள் மீது (Un-fittest) வெள்ளைநிறம் என்ற அளவுகோலை பயன்படுத்தி, தாங்கள் இயற்கையாகவே தகுதியுள்ள (Fittest) உயர்ந்த இனத்தவர் என்றும் ஆகவே தகுதியில்லாத கருப்பு நிற இனங்கள் மேல் ஆட்சி செய்யலாம் என்ற சிந்தனை அதிகரித்தது.
- <u>5). ஜெர்மானிய நாஜிசம் கருத்தியல் (Nazism Ideology)</u>: ஜெர்மனியில் ஏற்பட்ட மிதமிஞ்சிய தேசியவாதத்தின் (Hyper Nationalism) மூலமும், மனித அறிவு சார்ந்த படிப்புகள், அறிவியல் கண்டுபிடிப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சியோடு டார்வினின் சமூக கோட்பாடுகளும் ஏற்படுத்திய தாக்கத்தினால், ஜெர்மனியில் மிகப்பெரிய இனவெறிக்கு வித்திட்டது. இது ஆரியர்களின் இனவாத மற்றும் மதவாத அடிப்படையிலும் மனித சமூக இனங்களுக்கிடையே பாகு பாடுகளை ஏற்படுத்தும் புத்தியில்லாத நோக்கங்களாக உருவானது. இதின்படி தகுதியான ஆரியர்கள் வாழவேண்டுமானால், தகுதியில்லாத ஆரிய இனத்தைச் சேராதவர்கள் அழிக்கப்பட வேண்டும் கருத்துக்கள் ஜெர்மனி நாளிதழ்கள், புத்தகங்கள் மூலம் பரப்பப்பட்டன.
- <u>6). இனவாத யூத எதிர்ப்பு (Racial Anti-Semitism)</u>: ஜெர்மானிய நாஜிக்கள் தங்களை இயற்க்கையாகவே (Natural Selection) உயர்ந்த இனத்தைச்(Imperialism) சேர்ந்த ஆரியர்கள் (Aryan) என்றும் யூதர்களை தாழ்ந்த இனமாகவும், பிழைப்பிற்கான வாழ்க்கை போராட்டத்தில் நாஜிக்கள் தகுதியானவர்களாகவும் (Survival of the Fittest), தகுதியில்லாத யூதர்களை அழிக்கும் உரிமை உண்டென்று கூறினார்கள். ஜெர்மானியர்களின் இந்த நாஜிச கருத்தியல் (Nazi Ideology) இறுதியில் பெரிய அளவிளான யூத இன அழிப்பில் (Holocaust) முடிந்தது.

Nazism in Germany
ஜெர்மனியில் நாஜி அரசாங்கம்

SUN
Clean Election In Philippines On Tuesday
PTEMBER 16, 1935
18 Pages
2 Cents
HITLER DEPRIVES JEWS OF CITIZENSHIP RIGHTS, BANS INTERMARRIAGES
THREATENS OTHER STEPS

- 1) .அடால்ப் ஹிட்லர்: ஜெர்மனியில், முதலாம் உலகப் போரைத் தொடர்ந்து, அடால்ப் ஹிட்லர் கட்சியான National Socialist German Workers or Nazi Party தேர்தலில் வென்று அதிபராக நியமிக்கப்பட்டார். 1933, மார்ச் 23 ம் நாள் அன்று ஜெர்மன் பாராளுமன்றம் Enable Act சட்டபடி தேசிய நலனுக்காக எந்த சட்டத்தையும் அமல்படுத்தும் முழுமையான அதிகாரங்களை ஹிட்லருக்கு கொடுத்தது. இதனால் ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியா முழுவதும் இருந்த யூத வணிக வளாகங்கள், யூத குடியிருப்பு பகுதிகள், ஜெப ஆலயங்கள் மற்றும் மற்றும் சொத்துக்கள் எல்லாம் சூரையாடப்பட்டது.
- 2). ஜெர்மனியில் யூத எதிர்ப்பு: ஹிட்லர் டார்வினின் சமூக கோட்பாட்டு ஆதரவாளர். இவர் தேசியவாதம் (Nationalism) என்ற பெயரில் யூதர்களை தனிமைப்படுத்தத் தொடங்கினார். பத்திரிகைகள் யூதர்களுக்கு விரோதமாக எழுதின. வார மற்றும் மாத புத்தகங்களில் யூதர்கள் ஜெர்மானியர்களை சுரண்டுபவர்களாக படம் வெழியிட்டன. நாஜி இளைஞர் படை, யூதர்கள் ஜெர்மானிய சமூகத்தையும் கலாச்சாரத்தையும் கரை படுத்துகிறது என்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பரபினர்கள்.
- ,3). நியூரம்பெர்க் சட்டங்கள் (Nuremberg Laws:1935): இது யூதர்களுக்கும் ஜெர்மனியர்களுக்கும் இடையிலான திருமணங்கள், 45 வயதிற்குட்பட்ட ஜெர்மன் பெண்களை, யூதர்களின் வீடுகளில் வேலை செய்வதையும் தடைசெய்தது. ஹிட்லர் புதிய குடியுரிமை திட்டத்தை அமல்படுத்தி, அதில் ஜெர்மன் அல்லது ஜெர்மானி யர்களின் இரத்த சம்பந்தம் உள்ளவர்களுக்கே குடியுரிமை வழங்கினார். இதனால் யூதர்கள், ரோமானியர்கள் மற்று கருப்பின மக்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டது. ஹிட்லர் தன் அரசியல் எதிரிகளை இரும்பு கரம் கொண்டு அடக்கி, கொடிய சித்ரவதை கூடங்களை ஏற்படுத்தி ஆயிரக்கணகானோரை கொடூரமாக கொலை செய்தார். இந்த அநீதியான செயல்களுக்கு ஜெர்மன் தேசத்து திருச்சபைகளும் மௌனமாய் இருந்தது.

Nazism and Anti-Semitism
நாஜிக்களின் யூத எதிர்ப்புகள்



- 4). <u>இரவு உடைந்த கண்ணாடி (The Night of Broken Glasses)</u>: 1938 நவம்பர் 9 இரவு நேரத்தில், ஜெர்மனியில் யூதர்களுக்கு எதிரான வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. இதில் சுமார் 7,000 யூதர்களின் கடைகள் சூரையாடப்பட்டது. 650 க்கும் மேற்பட்ட ஜெப ஆலயங்கள் எரிக்கப்பட்டன. யூதர்களின் மருத்துவமனைகள், கல்வி கூடங்கள், தொழிற் கூடங்கள், வீடுகள் அழிக்கப்பட்டன. யூதர்களின் கல்லறை தோட்டங்களும் இடித்து தள்ளப்பட்டது. இந்த வன்முறைக்கு காவல்துறை மற்றும் தீயணைப்பு படையினரும் உடந்தையாக இருந்தார்கள். மறுநாள் காலையில் 30,000 யூதர்கள் கைது செய்யப்பட்டு சித்ரவதை முகாம்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கு படுகொலை செய்யப்பட்டார்கள்.

- <u>5).ஊரடங்கு உத்தரவு</u>: யூதர்களுக்கு சொந்தமான கடைகள், யூதரல்லாதவர்களால் நிர்வாகிக்கப் படாவிட்டால் அவற்றை மீண்டும் திறக்க அரசாங்கம் அனுமதிக்கவில்லை. யூதர்கள் தங்கள் வீடுகளைவிட்டு வெளிவரும் நேரம் கட்டுப்படுத்தப்பட்டது. யூதர்கள் மீது மட்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கபட்டது. ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியாவில் யூத குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் கல்விகூடங்களில் இருந்து நீக்கப்பட்டார்கள்.

- <u>6). போலந்தில் நடந்த படுகொலை</u>: 1939 ல் போலந்து தேசத்தின் மீது ஜெர்மனி படையெடுத்ததன் மூலம், இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்தது. போலந்து ஐரோப்பாவில் போலந்து தேசம்தான் யூதர்களின் மிகப்பெரிய மக்கள்தொகை கொண்டதாகும். போலந்து தேசத்தில் ஜெர்மனியின் நாஜி படைகள் மிக அதிகமான அளவில் மரண முகாம்களை(Concentration Camp) கட்டினார்கள். அந்த மரண முகாம்களில் யூதர்களுக்கு உணவு கொடுக்காமல் பட்டினியாய் சாகடித்தார்கள். இந்த முகாம்களில் பல்கேரியா, செக்கோஸ்லோவியா, ஹங்கேரி போன்ற பகுதிகளில் கைதுசெய்யப்பட்ட யூதர்கள் தொடர்வண்டிகள் மூலம் கொண்டுவரப்பட்டு அவர்கள் மீது சயனைடு விஷவாயு செலுத்தி, 30 இலட்சம் யூதர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர்.

Nazism and Anti-Semitism
நாஜிசத்தின் யூத எதிர்ப்புகள்

- 7). ஐன்சாட்ஸ்க்ரூபன் படுகொலை: ஜூன் 22, 1941 அன்று, நாஜி ஜெர்மனி படைகள் சோவியத் யூனியனில் யூதர்கள் அதிகமாக வாழும் Pale Settlement பகுதியில் புகுந்து லிதுவேனியாவில் 2,00,000 யூதர்களையும், பைலோருசியாவில் (Beylotssia) 3,75,000 யூதர்களையும் துப்பாக்கியால் சுட்டும், மீதமிருந்தவர்களை போலதிலுள்ள மரண சித்ரவதை கூடங்களில் விஷவாயு செலுத்தியும் படுகொலை செய்தார்கள். இது ஐன்சாட்ஸ்க்ரூபன் படுகொலை எனப்படும்.
- 8).வான்சி மாநாடு (Wannsee Conference:1943): ஐரோப்பா மற்றும் வட ஆபிரிக்காவில் வசிக்கும் எல்லா யூதர்களும் அழிக்கப்பட்ட வேண்டும் என்று வான்சி மாநாட்டில் ஹிட்டர் அறிவித்தார். இதை செயல்படுத்த, போலந்து, ஹங்கேரி, ஆஸ்திரியா போன்ற பல்வேறு நாடுகளில் இருந்து யூதர்கள் கொல்லப்படுவதற்காக கொலை மையங்கள் (Concentration Camp) மற்றும் மரண கூண்டுகளுக்கு (Gas Chamber) அழைத்துச் சென்று அங்கு துப்பாக்கியால் சுட்டும் விஷவாயு செலுத்தியும் யூதர்கள் இனப்படுகொலை செய்ய திட்டமிடப்பட்டது.
- 9). யூதர்களின் பிரச்சினைக்கு இறுதி தீர்வு (Final Solution): இது ஜெர்மானிய நாஜி படைகள் மூலம் ஐரோப்பாவில் வாழும் அனைத்து யூதர்களையும் கொலை செய்வதற்கான இராணுவ குறியீட்டு பெயர் ஆகும். இரண்டாம் உலகப் போரின்போது ஜெர்மனியின் நாஜி படைகள் ஐரோப்பாவில் உள்ள அயர்லாந்து, சுவீடன், துருக்கி இங்கிலாந்து மற்றும் வடக்கு ஆப்பிரிக்கா போன்ற ஆக்கிரமிக்கப்படாத நாடுகளைச் சேர்ந்த 11 மில்லியன் (1 கோடியே 10 இலட்சம்) ஐரோப்பிய யூதர்கள் ஒருவரையும் விட்டுவைக்காமல் இனப்படுகொலை செய்யும் திட்டம் ஆகும். இதற்காக ஜெர்மனி, போலந்து, பிரான்சு, சைபீரியா, ஆஸ்திரியா போன்ற நாடுகளில் 1100 க்கும் அதிகமான மரண கூண்டுகள் (Death Chambers) மற்றும் சித்ரவதை கூடங்கள் (Concentration Camp) நாஜிக்களின் உதவியுடன் கட்டப்பட்டன.

Anti-Semitism in Germany
நாஜிசத்தின் யூத எதிர்ப்புகள்







- 10).<u>யூத குழந்தைகள் அழிப்பு</u>: ஜெர்மனியின் நாஜி கொள்கைப்படி யூத குழந்தைகள் ஆபத்தானவர்கள் மற்றும் தேவை யில்லாதவர்கள் என்றார்கள். யூத குழந்தைகள் சரிரத்தில் குறைபாடு கொண்ட குழந்தைகள் போலந்து குழந்தைகள் ரோமானிய குழந்தை களையும் மனநிலை பாதிகப்பட்ட குழந்தை களையும் மரணகூண்டுகளுக்கு கொண்டு சென்று அங்கு விஷவாயு செலுத்தி 10,00,000 குழந்தைகளையும் இன படுகொலை செய்தார்கள்.
- <u>11). யூத பெண்கள் அழிப்பு</u>: நாஜிகாரரர்களின் கொள்கைகள்படி குறிப்பாக யூத பெண்கள், ரோமானிய பெண்கள், போலந்து பெண்கள் மற்றும் பெண்கள் விடுதியில் இருந்த சரீர குறைபாடுகள் எல்லோரையும் கைதுசெய்தார்கள். பேறு கால பெண்களையும் கைகுழந்தைகளின் பெண்களையும் வேலைசெய்ய பலனில்லாதவர்கள் என்று பிரித்து நேரடியாக மரணகூண்டுகளுக்கு அனுப்பி வைப்பார்கள்.
- <u>12). பெண்களுக்கு எதிரான வன்முறைகள்</u>: கைது செய்யப்பட்ட யூத பெண்களை நாஜி படையினர் கட்டாய வேலை செய்யவும், கட்டாய கருகலைப்பு செய்யவும். கட்டாய பாலியல் வேலை செய்யவும், கருத்தடை செய்யவும், மருத்துவ ஆராய்ச்சிக்கு என்று அநீதியான காரியங்களுக்காக பயன்படுத்தினார்கள். யூத பெண்களை அவமான படுத்தி, பாலியல் பலாத்காரம் செய்து, அடித்து, துன்புறுத்தி, உணவுக்காகவும் மற்ற அத்தியாவசிய தேவைக்காகவும் கட்டாய உடலுறவு வைத்துக் கொண்டார்கள். எதிர்த்த பெண்களின் தலைமுடியை சிறைத்தும், துணி இல்லாமல் இருக்க வைத்தும், அவர்களுடைய மர்ம உறுப்புகளில் சூடும் வைத்தார்கள். ஹிட்லரின் நாஜி படையினரால் சுமார் 20,00,000 பெண்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள்.

Nazism's Holocaust in Germany

- 13). ஆஷ்விட்ஸ் முகாம்(Auschwitz Camp): இது ஜெர்மானிய நாஜி படைகளால் Final Solution என்ற திட்டத்தின்படி, யூத இனத்தை ஐரோப்பாவில் இருந்து முழுவதும் அழிப்பதற்காக போலந்தில் நிறுவப்பட்ட மிகப்பெரிய மரண முகாம் ஆகும். இதில் கட்டாய தொழிலாளர் முகாம், சித்ரவதை முகாம், மற்றும் கொலைக்களம் என்று பல பிரிவுகளாக அமைக்கப்பட்டு இருந்தது. இந்த மரண கூண்டில் சுமார் 13 இலட்சம் யூதர்கள், சுமார் 74,000 பேர் Poles தேசத்தவர்கள், 21,000 பேர் யெகோவா சாட்சியினர் மற்றும் 15,000 பேர் பிரான்சு போர் கைதிகள் சித்ரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள்.
- 14).பெரிய இன அழிப்பு (Mobile Killing Squads): இரண்டாம் உலகப்போரின்போது ஆஸ்திரியா, ஹங்கேரி, ரோமானியா, செக்கோஸ்லோவேகியா மற்றும் சோவியத் யூனியனின் பகுதியை கைப்பற்றிய ஜெர்மானியர்கள், சுமார் 16,00,000 யூதர்கள், 2,00,000 சோவியத் யூனியன் போர் கைதிகள் மற்றும் 15,000 Roma (Gypsies) மக்களையும் ஜெர்மானிய சித்ரவதை முகாம்களுக்கு தொடர்வண்டி மூலம் கொண்டுவந்து, கார்பன் மோனோ ஆக்ஸைடு (CO) மற்றும் சைக்ளோன் (Zyklon) விஷ வாயுவை அனுப்பி, படுகொலை செய்தார்கள்.
- <u>15).கடைசி கட்டம் இனஅழிப்பு</u>: ஆஷ்விட்ஸ் முகாமுக்கு 19, மார்ச் மாதம் 1944 ஆண்டு நாஜிபடைகள் ஹங்கேரி நாட்டில் இருந்து 725,000 யூதர்களை ஆஷ்விட்ஸ் முகாமுக்கு கொண்டு வந்தார்கள். இந்த முகாமுக்கு நாஜிபடைகள் கைதுசெய்த யூதர்களை தொடர்வண்டிகள் மூலம் தினமும் கொல்லபடுவதற்காக அனுப்பி வைப்பார்கள். போலந்தின் மற்றொரு மரண கூண்டான Lodz ல் இருந்து 60,000 யூதர்கள் இந்த முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். இந்த முகாமில் விஷவாயு செலுத்தி கொடுரமாக எல்லோரையும் இனப்படுகொலை செய்தார்கள்.

Nazism’s Holocaust in Germany
நாஜிசத்தின் யூத எதிர்ப்புகள்

The Salt Lake Tribune

HITLER DEAD, SAY NAZIS

Churchill Hints Vital News on War by Saturday

Doenitz Succeeds As Reich Leader

Russ Claim On Hitler 'Death' Site

Small Nations Win Top Parley Places

- 16).ஹிட்லர் தற்கொலை: அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் சோவித் யூனியன் படைகள் தோல்வியின் விளிம்பில் இருந்த ஜெர்மனியின் பெர்லின் நகரை நோக்கி வரும்போது ஏப்ரல் 30, 1945 அன்று ஹிட்லரின் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார். ஆகவே ஜெர்மனி நாஜி படைகள் சரணடைந்ததால் இரண்டாம் உலகப்போர் மே 8, 1945 இல் முடிவுக்கு வந்தது. இத்துடன் ஹோலோகாஸ்ட் என்ற யூதர்களின் இனப்படுகொலையும் முடிவுக்கு வந்தது..
- 17).(பெரிய இனப்படுகொலை): உலக சரித்திரத்தில் Holocaust என்ற வார்த்தைக்கு சொல் அகராதியில் 1933–45 க்கு இடையில் ஜெர்மன் தேசத்து நாஜிக்கள் ஆட்சிகாலத்தில் இலட்சக்கணக்கான ஐரோப்பிய யூதர்களையும், பிற நாட்டு போர்கைதிகள், ரோம ஜிப்சிகள், கருப்பினத்தவர்கள் மற்றும் ஜெர்மானிய அரசியல் எதிரிகளை படுகொலை செய்யப்பட்டதை குறிப்பிட பயன்படுத்தும் வார்த்தை ஆகும்.
- 18).இரண்டாம் உலகப் போர்: இருபதாம் நூற்றாண்டில் இரண்டு உலகப்போர்களை மனிதகுலம் பார்த்துவிட்டது. கல்வி அறிவு, விஞ்ஞான வளர்ச்சி, தொழில்நுட்பம் மனித குலத்திற்கு சமாதானத்தை கொடுக்கும் என்ற கருத்து பொய்த்து விட்டது. டார்வினின் சமூக கோட்பாட்டின் தாக்கம் ஹோலோகாஸ்ட் (Holocaust) என்று அழைக்கப்படும் திட்டமிட்ட இனப்படுகொலையின் உச்சக்கட்டத்தை அடைந்தது. இரண்டாம் உலகப் போரின்போது யூத இன அழிப்பு உச்சகட்டத்தை அடைந்தது. ஜெர்மன் தேசத்து ஹிட்லரின் நாஜி படைகள் சுமார் 10 இலட்சம் குழந்தைகள் உட்பட 60 இலட்சம் யூதர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். இரண்டாம் உலகப்போரின் போது 85 மில்லியன் (8.5 கோடி) மக்கள் கொல்லப்பட்டது உலகத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இந்த இனைபடுகொலைகள் இன்னமும் உலகில் நடந்துகொண்டுதான் இருக்கிறது.

Establishment of United Nations

ஐக்கிய நாடுகள் சபை உறுவாகுதல்

- <u>ஐக்கிய நாடுகள் (United Nations)</u>: இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, மனிதகுலத்தை பாதுகாப்பதற்கு 57 நாடுகள் ஒன்று சேர்ந்து அக்டோபர் 24, 1945 அன்று அமெரிக்காவின் நியூயார்க் நகரில் ஐக்கிய நாடுகள் சபை மன்றம் ஏற்படுத்தப்பட்டது. இது மதம், இனம், மொழி, நிறத்தின் அடிப்படையில் நாடுகளுக்கிடையே யூத்தம் ஏற்பட்டுவிடாமல், சர்வதேச நீதிமன்றங்களை ஏற்படுத்தி, நாடுகளிடையே நட்பு உறவுகளை மேம்படுத்தி, சர்வதேச அளவில் பங்கரவாதத்தை தடைசெய்து, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்து அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்துகிறது.
- <u>மனிதநேயம்</u>: இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, யூதர்களுக்கு எதிராக நடந்த பெரிய இன அழிப்பு (Holocaust) குறித்து பல நாடுகள் மிகுந்த குற்ற உணர்வு அடைந்தது. அமெரிக்கா நாடு யூதர்களின் பிரச்சினைக்கு தீர்வுகான விரும்பி, சீயோன் இயக்கத்தின் (Zion Movement) வேண்டுகோளை ஏற்று, யூதர்களுக்கு பாலஸ்தீனத்தில் யூத அரசாங்கம் உறுவாகுவதில் அக்கரை காட்டியது. இங்கிலாந்து கட்டுப்பாட்டில் இருந்த பாலஸ்தீனத்தில், யூத-பாலஸ்தீனிய தீர்வுகான முடியாததால், ஐக்கிய நாடு சபையின் முடிவுக்கு இங்கிலாந்து விட்டுவிட்டது.
- <u>ஐக்கிய நாட்டு சபை ஆலோசனை</u>: பாலஸ்தீனத்தை இரண்டாக பிரித்து ஒருபகுதியை யூதர்களுக்கும் இன்னொரு பகுதியை பாலஸ்தீனர்களுக்கு கொடுக்கலாமென்று ஐநா சபை யோசனை தெரிவித்தது. அமெரிக்கா தேசம், ஐக்கிய நாட்டு சபையில் கொள்கைகளின் அடிப்படையில், பாலஸ்தீனத்தை பிரிப்பதை ஆதரிப்பதாகவும், சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த உதவ தயாராக இருப்பதாக சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முடிவை அக்டோபர் 11, 1947அன்று அறிவித்தது. அமெரிக்காவின் இந்த முடிவை யூதர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் பாலஸ்தீனர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இது வளைகுடா பகுதியில் போர் பதட்டத்தை மீண்டும் ஏற்படுத்தியது.

Creation of the State of Israel
இஸ்ரவேல் தேசம் உறுவாகுதல்

THE PALESTINE POST

STATE OF ISRAEL IS BORN

Most Crowded Hours in Palestine's History

JEWS TAKE OVER SECURITY ZONES

Egyptian Air Force Spitfires Bomb Tel Aviv; One Shot Down

U.S. RECOGNIZES JEWISH STATE

Proclamation by Head Of Government

2 Columns Cross Southern Border

Etzion Settlers Taken P.O.W.

Special Assembly Adjourns

David Ben Gurion

- <u>பாலஸ்தீனத்தை பகிர்வு திட்டம்</u>: ஐக்கிய நாடுகளின் சபையில் நவம்பர் 29, 1947 அன்று பாலஸ்தீனத்திற்கான பகிர்வு திட்டம் சட்ட எண் 181 ன் படி ஐக்கிய நாட்டு சபையில் தாக்கல் செய்யப்பட்டு, ஓட்டெடுப்புக்கு விடப்பட்டது. இதில் பாலஸ்தீனத்தை பகிர்வதற்கு ஆதரவாக 33 வாக்குகள், எதிராக 13 வாக்குககளும் பதிவாயின. அரபு நாடுகள் அனைத்தும் பகிர்வு திட்டத்திற்கு எதிர்த்து வாக்களித்தனர். ஆனால் இங்கிலாந்து உட்பட 10 நாட்டின் பிரதிநிதிகள் ஓட்டெடுப்பில் பங்குபெறாமல் வெளிநடப்பு செய்தனர். இந்த வாக்கெடுப்பில் மூன்றில் இரண்டு பங்கு அறுதி பெரும்பான்மையோடு, பாலஸ்தீனத்தின் பகிர்வு திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த தீர்மானத்தை பாலஸ்தீனியர்களும், அரபு நாடுகளும் கடுமையாக எதிர்த்ததோடு, அதை நிராகரித்தார்கள். இதனால் மீண்டும் யூத-பாலஸ்தீன பதட்டம் ஏற்பட்டது.

- <u>சுதந்திர இஸ்ரவேல் தேசம்</u>: உலக சரித்திரத்தில் மே 14, 1948 அன்று, 6,50,000 பாலஸ்தீன யூதர்களின் பிரதிநிதியாகிய டேவிட் பென்-குரியன் என்பவர் ஐக்கிய நாடுகளின் சபை மன்ற ஒப்புதலோடு இஸ்ரவேல் தேசத்தின் முதல் பிரதமராக பொறுப்பேற்றார். எருசலேமும் மற்றும் பெத்லகேம் நகரங்கள் மட்டும் ஐக்கிய நாடுகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது. உலக சரித்திரத்தில் சுமார் 2,000 ஆண்டுகளுக்கு பிறகு, முதன்முறையாக யூதர்கள் தங்கள் சொந்த தேசத்தில் சுதந்திர காற்றை சுவாசிக்க ஆரம்பித்தார்கள்.

- <u>சுதந்திர தினம்</u>: பாலஸ்தீனத்தில் வசித்த யூதர்கள் மகிழ்சியோடு மே மாதம் 14, 1948 ம் ஆண்டு சுதந்திர தினத்தை வீதிகளில் வந்து யூத ஆண்களும் பெண்களும் பிள்ளைகளுமாக மகிழ்ச்சியோடு நடனமாடினார்கள். அதே நாளில் உலகத்தின் எல்லா தேசங்களிலும் வாழ்ந்துகொண்டிருந்த யூதர்கள் தங்கள் வீடுகளில் ஒளி விளக்கு ஏற்றி, யெகோவா தேவனுக்கு நன்றி செலுத்தி, பெருமூச்சு விட்டார்கள்.

Israel's Freedom Wars:
இஸ்ரவேலின் சுதந்திரப் போர்கள்

THE RALEIGH TIMES

JEWS CLAIM TRUCE IS BROKEN

House Passes Military Budget

Measure Is Sent To Senate

Egyptians Reported Attacking

Gamblers Working In Other NC Cities?

Flood Crest Sweeps Toward Sea After Battering 1,000-Mile Area

- <u>1).இஸ்ரேல்–பாலஸ்தீன மோதல்கள்:</u> பாலஸ்தீனியர்கள் மற்றும் அரேபியர்கள், இஸ்ரவேல் தேசம் ஏற்படுத்தப்பட்டதை விரும்ப வில்லை. இதை மேற்கத்திய நாடுகளின் படையெடுப்பாக கருதினார்கள். ஐக்கிய நாடுகள் சபை நியாயமற்ற முறையில் தங்கள் நிலத்தை பங்குவைத்ததாக பாலஸ்தீனியர்கள் உணர்ந் தார்கள். இது இஸ்ரவேல்–பாலஸ்தீன மோதலுக்கு வழி வகுத்தது.
- <u>2). முதல் சுதந்திரப் போர்:</u> யூதர்கள் தங்கள் முதல் சுதந்திர நாளை 14, மே மாதம் 1948 மாலை 6:00 முதல் இரவு வரை கொண்டாடி, நிம்மதியாக தூங்கிக்கொண்டு இருக்கும்போது மறுநாள் காலையில், பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக 5 அரபிய நாடுகள் எகிப்து, ஜோர்டன், சிரியா, லெபனான் மற்றும் ஈராக் இஸ்ரவேல் மீது போர் தொடுத்தது. இஸ்ரவேல் தேசத்தில் விமானப்படையோ, கடற்படையோ இராணுவ டாங்குகளோ, போதுமான இராணுவ தளவாடங்களோ இல்லாத நிலையில் குறைந்த அளவு ஆயுதமும், போர் வீரர்கள் இருந்தாலும் 2000 ஆண்டுகளுக்குப்பின் பெற்ற தேசத்தை பாதுகாக்க முழுபலத்தோடு அரேபியர்களை எதிர்த்துப் வெற்றி பெற்றார்கள். எதிரிகளை விரட்டியதோடு மல்லாமல் பாலஸ்தீனர்களின் முக்கிய பகுதியான கலிலேயா, பாலஸ்தீன கடற்கரை பகுதிகள் மற்றும் எருசலேமின் மேற்குப் பகுதியுடன் இணைக்கும் பகுதிகளையும் கைப்பற்றினார்கள். இஸ்ரவேலின் இந்த வெற்றி உலகத்தையே திரும்பி பார்க்க வைத்தது.
- <u>3). இஸ்ரேல்–அரபு போர்கள்:</u> இஸ்ரவேல் தேசத்தை எப்படியும் கைப்பற்றிவிட வேண்டும் என்று அரபு நாடுகள் கூட்டாக சேர்ந்து நான்கு முறை போர் தொடுத்தார்கள். இவை முறையே: 1948 சுதந்திரப் போர், 1956 சீனாய் போர், 1967 ஆறு நாள் போர், 1973 யோம் கிப்பூர் போர்(Yom Kippur War). இந்த நான்கு போர்களிலும் அரபுப் படைகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தபோதிலும், ஒவ்வொரு முறையும் இஸ்ரவேல் தேசம், தன்னை தற்காத்துக் கொண்டு வெற்றி பெற்றதோடுமல்லாமல், எதிரிகள் வசமிருந்த பகுதிகளையும் கைப்பற்றினார்கள்.

Israel-Palestine Conflicts:
இஸ்ரேல்-பாலஸ்தீன பிரச்சினைகள்

- 4). <u>இஸ்ரேலின் எல்கை விரிவாக்கம்:</u> 1967 ல் இஸ்ரவேல் தேசத்திற்கு எதிராக நடந்த 6 நாட்கள் போரில் ஜோர்டான், எகிப்து மற்றும் சிரியா நாடுகளில் இருந்து, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கிழக்கு ஜெருசலேம், சீனாய் தீபகற்பம், காசா பகுதி, மேற்குக் கடற்கரை பகுதிகள் , மற்றும் கோலன் ஹைட்ஸ் (Golan Heights) பகுதிகளை இஸ்ரேல் கைப்பற்றியது.
- 5). <u>இஸ்ரேல்-பாலஸ்தீன முக்கிய பிரச்சினைகள்:</u> பாதுகாப்பு மற்றும் பரஸ்பர அங்கீகாரம், எல்லைக்கட்டுபாடுகள், தண்ணீர் உரிமைகள், எருசலேமின் கட்டுப்பாடு, இஸ்ரேலிய குடியேற்றங்கள், பாலஸ்தீனிய விடுதலை இயக்கங்கள், பாலஸ்தீனியர்கள் மறுகுடியமர்த்தப்படுதல் என்று பல உண்டு. ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் பல சர்வதேச அமைப்புகள் இஸ்ரேலின் West Bank மற்றும் காசா பகுதியின் ஆக்கிரமிப்பை குறைகூறுகின்றன. ஏனெனில் இஸ்ரேல் நாடு, பாலஸ்தீனியர்களின் காசா பகுதியின் வான்வெளியையும், பிராந்திய நீர்நிலைகளையும், மற்றும் கடல் போக்குவரத்து, தரைவழி சரக்கு போக்குவரத்து மற்றும் மக்கள் போக்குவரத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்கள். இதை பாலதீனியர்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள்.
- 6). <u>போரின் விளைவுகள்:</u> இஸ்ரேல்-பாலஸ்தீனியர்களுக்கும் இடையேயுள்ள நீண்டகால பிரச்சினைகள் முடிவுபெறாததால், பாலஸ்தீனத்தில் பல தீவிரவாத இயக்கங்கள் முளைக்கத்தொடங்கின. 1964 ல் பாலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO), 1968 ல் PFLP, 1970 ல் Abu Nidal, 1981 ல் பாலஸ்தீன இஸ்லாமிய ஜிகாத், 1982 ல் ஹிஸ்புல்லா, 1988 ல் ஹமாஸ் இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களும் ஆரம்பிக்கப்பட்டு எப்போதும் துப்பாக்கி சூடும், தற்கொலைபடை தாக்குதலும் நடைபெற்று கொண்டே இருக்கிறது. இஸ்ரேல்-பாலஸ்தீன மோதல்கள் இன்றைக்கும் உலகத்தில் மிக முக்கிய பிரச்சினையாகவே இருந்து வருகிறது.


Land
PALESTINE
1947
PALESTINE
Jerusalem
(UN admin
ISRAEL
Partition
Plan, 1947
PALESTINE
ISRAEL
1949-
1967
Palestinian
Land
ISRAEL
Present

Israel-Palestine Peace Agreements
இஸ்ரேல்-பாலஸ்தீன உடன்படிக்கை

- 6).Camp David Accords: 1978 ஆம் ஆண்டில், இஸ்ரேலும் எகிப்தும் வரலாற்று பூர்வமான சமாதான ஒப்பந்தம் அமெரிக்கா ஜனாதிபதி Jimmy Carter முன்னிலையில் கையெழுத்திடப்பட்டன. இதில் இஸ்ரேல் பிரதமர் Menachem Begin மற்றும் எகிப்து தலைவர் Anwar Sadat கையெழுத்திட்டனர். இதில் இஸ்ரேல் தேசம் சீனாய் பிரதேசங்களை எகிப்திய நாட்டுக்கு திரும்ப கொடுத்து, அதற்கு ஈடாக இஸ்ரேல் நாடு சூயஸ் கால்வாயை பயன்படுத்திக்கொள்ள ஒப்புதல் அழிக்கப்பட்டது.
- 7). Oslo Accords: 1993 ம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தில் இஸ்ரேலிய பிரதமர் Yitzhak Robin மற்றும் பாலஸ்தீன விடுதலை இயக்க தலைவர் யாசர் அராபத்தும் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் மூலம் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள். இதன்படி இஸ்ரேல் கைப்பற்றிய மேற்குக் கரையிலும் (West Bank), காசா பகுதியிலும் பாலஸ்தீனியர்களின் சுயராஜ்யத்தை படிப்படியாக அமல்படுத்துவதை இஸ்ரேல் ஏற்றுக்கொண்டது.
- 8).Camp David Accords: அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் தலைமையில் 2000 ஆம் ஆண்டு கேம்ப் டேவிட் உச்சி மாநாட்டில் இஸ்ரேலிய-பாலஸ்தீனிய சமாதான பேச்சுவார்த்தை அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் தலைமையில் இஸ்ரேலிய பிரதமர் Ehud Barak மற்றும் யாசர் அராபத் இடையே நடைபெற்றது. இது தோல்வியில் முடிந்ததால் இஸ்ரேல்-பாலஸ்தீனிய சண்டைகள் மீண்டும் தொடர்ந்தது.
- 9).மீண்டும்தோல்வி: 2010, செப்டம்பர் மாதம் அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமா முன்னிலையில் இஸ்ரேலிய-பாலஸ்தீனிய சமாதான பேச்சுவார்த்தை இஸ்ரேலிய பிரதமர் Netanyahu மற்றும் Mahmoud Abbas இடையே நடைபெற்றது. இதுவும் தோல்வியில் முடிந்து, மீண்டும் சண்டைகள் தொடர்ந்தது.

Israel-Palestine Conflicts:
இஸ்ரேல்-பாலஸ்தீன பிரச்சினைகள்



- 10).இஸ்ரேலிய-பாலஸ்தீன மோதல்: பாலஸ்தீனத்தில் கடந்த 55 ஆண்டுகளாக இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள மேற்கு கரை (west Bank) மற்றும் காசா பகுதிகள் மிகவும் அபாயகரமானது. இங்கு நடைபெறும் மோதல்கள் தான் உலகின் மிகவும் மோசமான மோதல் (High Sensitive Conflict) என்று பார்க்கப்படுகிறது. இதுவரை 24,946 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் 36,260 பேர் காயமடைந்துள்ளார்கள். பாலஸ்தீனத்தில் 91,105 பேர் கொல்லப்பட்டு, 78,038 பேர் காயமடைந்துள்ளனர்.
- 11).டொனால்ட் டிரம்ப்: அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் டிசம்பர் 6, 2017 ல் எருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கிகரித்து, அமெரிக்காவின் தூதரகத்தை Tel Aviv ல் இருந்து எருசலேமுக்கு மாற்றியது மீண்டும் போர் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் 28 ஜனவரி 2020 அன்று இஸ்ரேல்-பாலஸ்தீன சமாதான திட்டத்தை அறிவித்தார். இதை பாலஸ்தின அதிபர் Mahmoud Abbas நிராகரித்துவிட்டார்.
- 12).ஜெப விண்ணப்பம்: பாலஸ்தீனத்தின் எருசலேம் பகுதி யூதர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்களுக்கு புனிதபூமி ஆகும். இதுவரை நடந்த யுத்தம் எல்லாம் எருசலேமை மையமாக கொண்டுதான் நடந்துள்ளது. இதுவரை இஸ்ரேல்- பாலஸ்தீனம், இஸ்ரேல்-யோர்தான், இஸ்ரேல்-எகிப்து, இஸ்ரேல்-லெபனான் என்று பல சமாதான உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டாலும் எருசலேம் அமைதியை இழந்தே கானப்படுகிறது. எருசலேமை சொந்தம் கொண்டாடுவதற்கு இஸ்ரேல்-பாலஸ்தீனர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள மோதல்கள் மூன்றாம் உலக போருக்கு அழைத்துச் செல்லும் என்று கணிக்கப்படுகிறது. எருசலேமின் சமாதானத்திற்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

Divine Betrothal: I am Your God; and You are My People. உடன்படிக்கை: நான் உங்கள் கடவுள்; நீங்கள் என் மக்கள்

- <u>இஸ்ரேலின் தேசிய கொடி</u>: 1891 ம் ஆண்டு சீயோன் இயக்கத்தினர், இஸ்ரேலிய தேசிய கொடியை வடிவமைத்தார்கள். இது நீல நிற கோடுகளுடன் வெள்ளை நிறத்தில் உள்ளது. வெள்ளைநிறம் தெய்வீக நன்மைகளையும், நீல நிறம் கடவுளின் மகிமையையும் குறிக்கிறது. இஸ்ரேலின் தேசிய கொடியில் உள்ள நட்சத்திரம், தாவீதின் நட்சத்திரம் என்று அழைக்கப்படுகிறது. இது தாவீதின் சந்ததியில் இருந்து வந்த யூதர்களை குறிப்பதாகும். இந்த துணியின் அடிப்படை வடிவமைப்பு, அஷ்லேனாசி தல்லித் (Ashlenazi Tallit), யூதர்களின் ஜெபவஸ்திரத்தை நினைவுபடுத்துகிறது.
- <u>இஸ்வேல் சிதறடிக்கப்படும்</u>: இது வேதாகம தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாகும் (லேவி 26:33, உபாகமம் 4: 23-27, 28:25,37,64). கிபி 70 ல் இரண்டாம் எருசலேம் ஆலயம் ரோமானியர்களால் இடிக்கப்பட்ட பின்னர் யூதர்கள் உலகம் முழுவதும் சிதறடிக்கப்பட்டார்கள். இந்நிலையில் சுமார் 2000 ஆண்டு களுக்கு பின்னர் யூதர்கள் மீண்டும் இஸ்ரவேலுக்கு கூட்டி சேர்க்கப்பட்டார்கள். இது சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன்பு மோசேயினால் எழுதப்பட்ட தெய்வீக வார்த்தைகளின் நிறைவேறுதலாகும் (உபா 30: 3-4).
- <u>தெய்வீக திருமண உடன்படிக்கை</u>: உலகமெங்கும் சிதறடிக்கப் பட்ட இஸ்ரவேலர்கள் தாய்நாடு திரும்பிவரும் காட்சியை பல தீர்க்கதரிசிகள் இறைவாக்குறைத்தார்கள் (ஏசா 11.12). எசேக்கியேல் இதை ‘உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு’ தரிசனத்தில் கண்டார் (எசே 37: 1-14, 21). யூதர்கள் பூமியின் நான்கு திசைகளிலும் சிதறடிக்கப்பட்ட போதிலும், யெகோவா கடவுள் இஸ்ரவேலை அழிக்கவில்லை; மாறாக வெறுமனே விவாகரத்து செய்து, கொஞ்சநாள் தள்ளி வைத்திருந்தார் (எரே 3.8, ஓசி 2: 2-13). ஆனால் இப்போது அவளை மறுமணம் செய்து கொண்டு, புதிய வாழ்க்கை கொடுத்தார். இது கடவுளின் தெய்வீக திருமணம் ஆகும் (ஓசி 2: 14-20).

Reconciliation: Christianity & Judaism கிறிஸ்தவ-யூத நல்லிணக்கம்



- 1).மறுசீரமைப்பு (Reconsideration): சரித்திரத்தில் முஸ்லிம்கள், சோவியத் யூனியன் அமைப்புகள், கிறிஸ்தவர்கள் மற்றும் ஜெர்மனி நாஜி படைகள், யூதர்களுக்கு எதிராக நடத்திய பெரிய இன அழிப்புக்கு பின் 1950 ல் கிறிஸ்தவ வேதபண்டிதர்களும், கிறிஸ்தவ மத வரலாற்று ஆசிரியர்களும், கல்வியாளர்களும், அறிஞர்களும் கிறிஸ்தவ – யூத மதத்திற்கு இடையேயான கசப்பான கடந்தகால உறவுகளை சீர்படுத்தி, பரஸ்பர புரிந்துகொள்ளுதலை ஏற்படுத்த மிகவும் பிரயாசப்பட்டார்கள்.
- 2).மத நல்லிணக்கம் (Religious Reconciliation): கிறிஸ்தவ- யூத மதங்களுக்கு இடையிலான புரிதலையும் (Understanding), பரஸ்பர ஏற்றுக்கொள்ளுதலையும் (Acceptance) மேம்படுத்தும் முயற்சிகள் ஆகும். சமீபத்திய ஆண்டுகளில், யூத-கிறிஸ்தவ மத நல்லிணக்கம் மூலமாக, .ரோமன் கத்தோலிக்க திருச்சபைகளிலும் சீர்திருத்த திருச்சபைகளிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது.
- 3).மதமாற்ற பிரச்சினைகள்: யூத-கிறிஸ்தவ உறவுகளில், யூதர்களை, கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்த முயற்சிகள் தீர்வு கானப்பட வேண்டிய ஒன்றாகும். இதற்காக ரோமன் கத்தோலிக்க போப் பதினாறாம் பெனடிக்ட் (1972) ரோமன் கத்தோலிக்க திருச்சபையானது, யூதர்களை மதமாற்றம் செய்யும் முயற்சிகளுக்கு இடம் கொடுக்ககூடாது என்று பரிந்துரைத்தார். ஏனெனில் இஸ்ரவேல் கர்த்தரின் கரத்தில் இருக்கிறது; அவர் அதை முழுமையாக ஏற்ற நேரத்தில், இரட்சிப்பார் என்று கூறினார். முற்போக்கான எண்ணம் கொண்ட பல சீர்திருத்த திருச்சபை பிரிவுகள், இனி யூதர்களை மதமாற்றம் செய்ய மாட்டோம் என்று பகிரங்கமாக அறிவித்தார்கள். ஆனால் பழமைவாதம் கொண்ட கிறிஸ்தவ திருச்சபை பிரிவுகள், யூதர்களிடையே சுவிசேஷம் செய்வதற்கான முயற்சிகளைத் தொடருவோம் என்று கூறி, இது யூதமத எதிர்ப்பினால் அல்ல (Not in Anti-Sematic method) என்று விளக்கம் கொடுத்தார்கள்.

Reconciliation: Christianity & Judaism

கிறிஸ்தவ- யூத மத நல்லிணக்கம்

- 4).ரோமன் கத்தோலிக்கம்: போப் இரண்டாம் ஜான் பால், யூத-கிறிஸ்தவ உறவை மேம்படுத்த சிறப்பான முயற்சி செய்தார். ஏப்ரல் 13, 1986 அன்று ரோமிலுள்ள யூதர்களின் ஜெப ஆலயத்திற்கு சென்ற முதல் ரோமன் கத்தோலிக்க போப் ஆவார். அப்போது வரலாறு முழுவதும் யூதர்களுக்கு எதிராக, ரோமன் கத்தோலிக்க திருச்சபை தீங்கிழைத்ததற்காக மன்னிப்பு கோரினார். போப் ஜான் பால் இறையியலானது யூத மதம் கிறிஸ்தவத்தின் "மூத்த சகோதரர்" என்று குறிப்பிட்டார்.
- 5).சீர்திருத்த திருச்சபைகள்: 1991 ல் நடைபெற்ற ஐரோப்பிய லூத்தரன் திருச்சபைகளின் ட்ரைபெர்கன் பிரகடனத்தில் (Driebergen Declaration), மார்ட்டின் லூத்தரின் யூத எதிர்ப்பு எழுத்துக்களை நிராகரித்து, யூதர்களுடன் உள்ள உறவுகள் சீர்திருத்தப்பட வேண்டும் என்று அறைகூவல் விடுத்தது.
- 6).கிறிஸ்தவ அறிஞர்கள் குழு: 2002 ஆண்டு செப்டம்பர் மாதம் கிறிஸ்தவ-யூத உறவுகள் குறித்து ஆறு சீர்திருத்த திருச்சபை பிரிவுகளைச் சேர்ந்த 22 கிறிஸ்தவ அறிஞர்கள், இறையியலாளர்கள், வரலாற்று ஆசிரியர்கள், மதகுருக்கள் இணைந்து யூத - கிறிஸ்தவ உறவுகளை மேம்படுத்த சிறப்பான இறையியல்களை பகிர்ந்துகொண்டார்கள்.
- 7).யூதர்களின் கூட்டமைப்பு: 1947 ல் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச யூதர்களின் சபை மன்றம் (The International Council of Jews) 1987 ல் சர்வதேச கிறிஸ்தவ சபை மன்றத்துடன் (The International Council of Christian) இணைந்து யூத - கிறிஸ்தவ உறவை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்டன. 1993 ஆம் ஆண்டில் யூதர்களும் கிறிஸ்தவர்களும் மதஅடிப்படையில் இணைந்து சமுதாயத்தில் சமாதான, நீதி, நியாயங்களுக்காக செயல்பட முடிவு செய்யப்பட்டது. அப்படியே யூதர்கள் புனித பூமிக்கு உரிமை கொண்டாடுவதை கிறிஸ்தவர்கள் மதிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

Reconciliation: Christianity & Judaism/ யுத-கிறிஸ்தவ நல்லிணக்கம்

8).மதங்களின் நல்லிணக்கம்:யுதர்கள், கிறிஸ்தவர்கள் வேதத்தின் அதிகாரத்தை (Authority) ஏற்றுக்கொள்கிறார்கள். இருவரும் தோராவில் சொல்லப்பட்ட சட்ட திட்டங்களை ஏற்றுக் கொள்கிறார்கள். இருவரோடும் கடவுள் உடன்படிக்கையை ஏற்படுத்தியுள்ளார் (ரோம 11:29). கிறிஸ்தவத்தின் எழுச்சிக்கு முன்பு, யூதர்கள் மட்டுமே இஸ்ரவேலின் கடவுளை வணங்கினர். கிறிஸ்தவர்களும் வானத்தையும் பூமியையும் படைத்த ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் கடவுளை வணங்குகிறார்கள். கிறிஸ்தவத்தின் மூலம், கோடிக்கணக்கானோர் இஸ்ரவேலின் கடவுள் மூலம் இரட்சிக்கப்பட்டு கொண்டு இருக்கிறார்கள்.

9)பெரிய விலைக்கிரயம்: ஆதியாகமத்தில் ஏசாவுக்கும் யாக்கோபுக்கும் இடையே ஏற்பட்ட நல்லிணக்கம் அருமையாக விவரிக்கப்பட்டுள்ளது (32:1-33:16). ஏசாவும் யாக்கோபும் நல்லிணக்கம் செய்து, அமைதலுள்ள வாழ்க்கை வாழ முடியுமானால்; யூதர்களும் கிறிஸ்தவர்களும் வாழமுடியும். மோதல்களுக்கு பெரிய விலைக்கிரயம் கொடுத்தாகிவிட்டது.

10):இன்றைய தேவைகள்: யூதர்களுக்கு விரோதமாக, பயன்படுத்தப்பட்ட புதிய ஏற்பாட்டின் மீதான அடிப்படை இறையியல் அணுகுமுறைகளை, கிறிஸ்தவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். நம்மைச் சுற்றியுள்ளவர்கள் பெறும் பல ஆசீர்வாதங்களை அங்கீகரிக்கும் அதே வேளையில், நம்முடைய பாரம்பரிய மரபில் வாழவும், வளரவும் முடியும் என்ற புரிதல் நம்மிடையே இருக்குமேயானால் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். சண்டைகள் மற்றும் தவறான புரிதல்கள் மூலமாக உறவுகள் அறுந்துபோன இவ்வுலகில் அமைதியை எதிர்பார்த்து நம்பிக்கையுடன் ஒருவருக்கொருவர் கலந்துரையாடி அன்பில் பலப்படுவோம். யூதர்களும் கிறிஸ்தவர்களும் மேசியாவுக்காக காத்திருக்கிறார்கள். இந்த காத்திருத்தலில் கடவுளுக்கு சாட்சியாக வாழ்ந்து, இந்த உலகத்திற்கு ஒளியாக, உப்பாக வாழ்ந்து, கடவுளின் ஆழுகைக்கு இணைந்து செயல் படுவோம்.

Conclusion / முடிவுரை

- <u>ஆரம்பம்</u>: கானான் தேசத்தில் இஸ்ரவேலரின் ஆட்சி யோசுவாவின் வெற்றிகளோடு தொடங்குகிறது. தாவீது ராஜா எருசலேமை இஸ்ரவேலின் தலைநகராக மாற்றினார். சாலமோன் எருசலேம் ஆலயத்தை கட்டி பிரதிஷ்டை செய்தார்.
- <u>வீழ்ச்சி</u>: கிமு 722 ல் இல்வேலின் 10 கோத்திரங்களும் அசீரீயர்களிடம் வீழ்ந்து உலக சரித்திரத்தில் மறைந்து போனார்கள். கிமு 586 ஆம் ஆண்டு எருசலேம் ஆலயம் பாபிலோனியர்களால் இடிக்கப்பட்ட நாள் முதல் தொடர்ச்சியாக பாபிலோனிய, பாரசீக, கிரேக்க, ரோமானிய, மற்றும் பைசன்டைன் (Byzantine)பேரரசுகள், இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ சிலுவைப்போர்கள், ஒட்டோமான் பேரரசு மற்றும் பிரிட்டிஷ் பேரரசு ஆதிக்கத்தின்கீழ் எருசலேம் ஆலயமும், பாலஸ்தீன பகுதியும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.
- <u>போராட்ட வாழ்க்கை</u>: கடந்த 2500 ஆண்டு உலக சரித்திரத்தில், யூதர்கள் தங்களின் சொந்த தேசத்திலிருந்து விரட்டப்பட்டு, உலகமெங்கும் பரதேசியாய் புலம்பெயர்ந்து, நாடுகடத்தப்பட்டு, நிந்தைகள், அவமானங்கள், சொத்து, சுக இழப்புகள் என்று துன்புறுத்தல்களை அனுபவித்து, இலட்சக் கணக்கானோரை இனப் படுகொலைகளில் இழக்கக்கொடுத்து, இறுதியில் 1948 இல் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்து சுதந்தர காற்றை சுவாசிக்கின்றார்கள்.
- <u>அன்றும் இன்றும்</u>: இஸ்ரவேல் தேசத்தின் தந்தையான ஆபிரகாம் தொடங்கி கடந்த 4000 ஆண்டுகளாக யூதர்கள் தங்கள் மதத்தையோ, இனத்தையோ, கலாச்சாரத்தையோ, தேசிய அடையாளத்தையோ இழந்துவிடவில்லை. தற்கால யூத எதிர்ப்பு (Anti Semitism) என்பது புதிய யூத எதிர்ப்பு என்று சிலரால் முத்திரை குத்தப்படுகிரார்கள். ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் யுத எதிர்ப்பு என்பது யூதர்களின் வளர்ச்சியை பொறுக்கமுடியாத பொறாமையே. ஏனெனில் யூதர்கள் மத, இன, சமூக, கலாச்சார, பொருளாதார ரீதியாக, மொழியியல் ரீதியாக, அறிவு ஜீவிகள் என்று எல்லா வகையிலும் முன்னனியில் இருந்தார்கள். இன்றும் உலக வல்லரசு நாடுகளில் ஒன்றாக இருக்கின்றார்கள்.

Bibliography

1) John Bright, A History of Israel, 3d ed. (Philadelphia, 1981).
2) John Bowden, A History of Israel in Old Testament Times, 2d ed. (Philadelphia, 1981).
3) Peter R. Ackroyd, Israel under Babylon and Persia (London, 1970).
4) T. H. Robinson, A History of Israel, 2 vols (1932); H. M. Orlinsky, Ancient Israel (1954).
5) J. B. Pritchard ed., Ancient Near Eastern Texts Relating to the Old Testament, 2nd ed. (1955).
6) L. H. Grollenberg, Atlas of the Bible, tr. J. M. H. Reid (1956).
7) Albright, W. F. Biblical Period from Abraham to Ezra: An Historical Study, London, Harper, 1963.
8) Alt, A. Essays on Old Testament history and religion. Doubleday, London, 1967.
9) Finkelstein I. and Silberman N., The Bible Unearthed: Archaeology's New Vision of Ancient Israel and the Origin of Its Sacred Texts, New York, Free Press 2002
10) Kitchen, K. A. Ancient Orient and Old Testament New York, Inter Varsity Press, 1975.
11) Laird, Harris, R. Exploring the Basics of the Bible, New York, Crossways Books, 2002
12) Moscati, S. Semites in Ancient History, University of Wales, London, 1959
13) Renn, S. Expository Dictionary of Bible Words: Word Studies for Key English Bible Words Based on the Hebrew And Greek Texts, Sydney, Hendrickson Publishers 2005
14) Speiser, E.A. found in Freedman, D The Anchor Bible, Volume 1, Doubleday, London 1998.
15) G. E. Wright and F. V. Filson, The Westminster Historical Atlas to the Bible, rev. ed. (1956).
16) M. Noth, The History of Israel, 2nd ed. (New York : Harper & Row,1960).
17) F. F. Bruce, Israel and the Nations (USA: Inter Varsity Press,1963).
18) R. K. Harrison, Introduction to the Old Testament (USA: Hendrickson Publishers, 1970).

THE END.

Produced By: Gamaliel Bible College, Mumbai, India
For Your Feedback: ddavidmumbai@gmail.com

God Bless You to Bless Others…